
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

3-3-1974

40 காசு





உயிர்களிடத்து அன்பு வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்






கோகுலம்

மலர் 2 : இதழ் 24
மார்ச் 3, 1974
பிரமாதீச, மாசி 19

"அம்மா இடுப்பின் சுகமாமோ
சும்மா இருடா கண்ணே நீ!"

வண்ணப்படம்: கே. எஸ். ராமானுஜம்



சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம் ... ரூ. 10–00
ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை:

ஆண்டுச் சந்தா: ரூ. 15–00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள்:

ஆண்டுச் சந்தா ரூ. 25–00

மானேஜர், கோகுலம், கல்கிப் பூங்கா, சேத்துப்பட்டு, சென்னை-600031



திருமுருக கிருபானந்தவாரியார்

அறுகு துலாதானம்

விநாயகப் பெருமானை இடையறாது வழிபடுகின்ற மகா முனிவர் கவுண்டின்யர். இவருடைய மனைவி ஆசிரியை.

ஆசிரியை தன் கணவரைப்பார்த்து, ''ஓர் அறுகு தந்த திரிசிரனுக்கும் விரோசனைக்கும் மலையளவு செல்வத்தை விநாயகர் வழங்கினாரே, நாம் மலை போலே குவித்து அறுகினால் பிள்ளையாரை வழிபடுகின்றோமே? நமது வறுமை தீரவில்லையே? இதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டாள்.

கவுண்டின்ய முனிவர் அறுகின் பெருமையை, ஆசிரியையும் மற்றைய ஏனைரும் வானோரும் உணர்ந்து உய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டார். அன்புடன் உள்ளம் உருகி ஆனைமுகப் பெருமானுக்கு அர்ச்சனை புரிந்து ஓர் அறுகை எடுத்து மனைவியிடம் தந்தார். ''நீ சென்று எல்லாச் செல்வங்களையும் படைத்த இந்திரனிடம் இந்த அறுகுக்கு நிறையான செல்வத்தைப் பெற்று வா'' என்றார்.

ஆசிரியை அந்த அறுகை எடுத்துக் கொண்டு தேவ லோகம் போய் அமரர் கோமானைக் கண்டாள். இந்திரன் அந்த அம்மையாரை வரவேற்று வழிபாடு செய்தான்.

ஆசிரியை ''தேவர் கோவே! என் கணவனார் இந்த அறுகின் நிறைக்கு ஏற்ற நிறையுள்ள பொன்னை உன்னை வேண்டிப் பெற்று வருமாறு என்னை அனுப்பினார்'' என்றாள்.

இந்திரன் அவரை ''இறைஞ்சி இது குபேரனால் தான் ஆகும். அங்கு போய்ப் பெறுவீராக'' என்று கூறித் தன் தூதருடன் அனுப்பினான்.

இந்திர தூதர்கள் குபேரனிடம் சென்று ''ஐயனே! அம்மையாருடைய கரத்தில் உள்ள அறுகை நிறுத்து அதன் நிறைக்குப் பொன் தருமாறு அமரேசன் அனுப்பினான்'' என்றார்கள்.

குபேரன் அறுகைக் கண்டு அலட்சியமாக, ''இந்த அறுகின் நிறைக்கு ஏற்ற பொன்னைப் பெறுவதற்கா இவரை இந்திரன் என்னிடம் அனுப்பினார். மிகவும் நன்று'' என்று புன்னகை புரிந்தான். துலாக் கோலை எடுத்தான். அறுகை ஒரு தட்டில் வைத்தான். மற்றொரு தட்டில் ஒரு பொற்காசை வைத்தான். நிறை சரியாகவில்லை. பலப் பல பொற்காசுகளை வைத்தான். தனது செல்வம் அனைத்தையும் வைத்தான். நிறை சரியாகவில்லை. நவரத்தினங்கள், பட்டாடைகள், வெள்ளி முதலிய எல்லாவற்றையும் வைத்தான். அறுகின் தட்டு மேலே எழவில்லை. குபேரன் அறுகின் பெருமையையுணர்ந்தான். ''இந்த ஓர் அறுகுக்கு என் நவ நிதிகளும் ஈடாக மாட்டா. இனி என் குடும்பத்துடன் துலையில் ஏறுவேன்'' என்று விநாயகரைத் தியானித்துத் தன் குடும்பத்துடன் துலையில் ஏறினான். அப்போதும் தட்டு சரியாகவில்லை.

இந்திரன் அப்போது அங்கு வந்தான். குபேரன் ''இந்திர பகவானே! நான் உமக்கு என்ன தீங்கு செய்தேன்? இந்த ஒரு புல்லுக்கு என் நிதியமும் நானும் நிகராகவில்லை என்று எல்லோரும் இகழுமாறு செய்தீரே?'' என்றான்.

இந்திரனும் துலையில் ஏறினான். ஏனைய தேவர்கள் யாவரும் துலையில் ஏறினார்கள். அறுகின் தட்டு உயரவில்லை. எல்லோரும் நாணினார்கள். தங்கள் அரிய செல்வங்கள் யாவும் விநாயகருக்கு அர்ச்சனை புரிந்த ஓர் அறுகம் புல்லுக்கு

நிகராகவில்லையே? என்று எண்ணி அகந்தையடங்கினார்கள்.


அங்கே சிவபெருமான் இடபத்தின் மீது வந்து காட்சியளித்தார். ''இந்திராதி இமையவர்களே! அறுகின் அருகில் ஒன்றும் இணையாகாது. எல்லோரும் தட்டை விட்டு, உங்கள் செல்வச் செருக்கை விட்டு விட்டு, இறங்குங்கள். கவுண்டின்ய முனிவரிடம் போவோம்'' என்றார். சிவபெருமானுடன் இந்திரன், குபேரன் மற்றைய தேவர்கள் எல்லோரும் கவுண்டின்ய முனிவரிடம் வந்தார்கள். முனிவர் பயபக்தியுடன் சிவமூர்த்தியைப் பணிந்தார்.

அரனார் ''அருந்தவ முனிவா! உனக்கும் உன் வழிபாட்டின் அறுகுக்கும் மூவுலகும் நிகராகமாட்டா? உனக்குச் சகல செல்வங்களையும் வழங்கினோம். உனக்கு நிகர் நீதான். உனது விநாயக பூசை சமானமில்லாதது. உன் புகழ் வாழ்க'' என்று திருவருள் புரிந்து மறைந்தருளினார். அமரர்கள் அவரை அஞ்சலி செய்தார்கள்.

காமதேனுவும் கற்பகமும் கவுண்டின்ய முனிவரிடம் குறிப்பறிந்து சகல செல்வங்களையும் வழங்கிக் கொண்டிருந்தன.

ஆசிரியை கணவனாரைத் தொழுது, ''என் உயிர்த் துணைவரே! இன்று நான் கணேசருடைய பெருமையையும் அறுகின் அருமையையும் நன்கு உணர்ந்தேன்'' என்று கூறித் தொழுதாள்.

அறுகின் பெருமையை அனைவரும் அறிந்து, அறுகினால் கணேசரை வழிபட்டு எல்லா நலன்களையும் பெற்றார்கள்.





வழிகாட்டி

"ரேவதி"

பாதுஷா ஜலாலுதீன், ஆசிரியர் ஹாஜி முகமத்கானுக்கு எதிரில் பணிவோடு அமர்ந்து கொண்டிருந்தார்.

"எழுதப் படிக்கத் தெரியாதவன் கண் இழந்தவனுக்குச் சமம். அதிலும் நீ இப்பொழுது சாதாரண ஜலாலுதீன் அல்ல. பாதுஷா ஜலாலுதீன். மக்களுக்கு வழிகாட்ட வேண்டியவன். இனியும் நீ கல்விப் பயிற்சியில் அக்கறை காட்டாமல் இருப்பது உன்னை நீயே ஏமாற்றிக் கொள்வதாகும்" என்று உண்மையான மன வருத்தத்தோடு கூறினார் ஆசிரியர்.

"கல்வியின் சிறப்பை நான் அறியாதவனல்ல. கற்க வேண்டிய வயதில் விளையாட்டிலேயே பொழுதைக் கழித்தேன். இப்பொழுது உண்மையாகவே கல்வி கற்க விரும்புகிறேன். ஆனால் மன்னனுக்குரிய பணிகளைக் கவனிப்பதற்கே நேரம் போதவில்லையே! என்ன செய்வது?" என்று ஏக்கப் பெருமூச்சு விட்ட பாதுஷாவை ஆசிரியர் இரக்கத்தோடு நோக்கினார். ஒரு காலத்தில் பாடம் படிக்க வராமல் சாக்குப் போக்குச் சொல்லிக் கல்விப் பயிற்சியை அலட்சியம் செய்த மாணவனா அதற்காக இப்படி வருந்தி ஏங்குகிறான்?

"நீங்கள் சிறிது நேரம் என்னோடு இருங்கள். என்னுடைய நிலை உங்களுக்குப் புரிந்து விடும்" என்று கூறிய பாதுஷாவின் வேண்டுகோளைத் தட்டாது சற்றுத் தள்ளி அமர்ந்து கொண்டார் ஆசிரியர்.

உள்ளே வந்து வணங்கிய பணியாள் பாதுஷாவிடம், பாரசிகத்திலிருந்து இரண்டு பாடகர்கள் வந்திருப்பதாகக் கூறினான். பாதுஷாவின் உத்தரவு





கிடைத்ததும் இரண்டு பாடகர்கள் உள்ளே வந்து வணங்கினார்கள்.

"பாரசீகத்துப் பாடகர்களென்றால் சூபிஞானிகளின் கவிதைகள் தெரிந்திருக்க வேண்டுமே? அவைகளில் ஏதாவது பாடுங்கள்" என்று உத்தரவிட்டார் பாதுஷா. இரண்டு பாடகர்களும் பாடத் தொடங்கினார்கள். கவிதையின் பொருளும், இசையும், குரலும் ஒன்றுக்கொன்று பொருத்தமாக ஒத்துழைத்ததால், அவர்கள் பாட்டு இசைவிருந்தாக இருந்தது. தலையை ஆட்டி ஆட்டித் தம்மை மறந்து ரசித்த பாதுஷா இடையிடையே "சபாஷ்" போட்டுப் பாடகர்களை உற்சாகப்படுத்தினார்.

ஓர் இடத்தில் பாடகர்கள் தவறு செய்தனர். சொற்களை மாற்றிப் பாடினர். கல்வியில் கரை கண்ட ஆசிரியருக்கு அந்தத்தவறு தெரிந்துவிட்டது.

"மீண்டும் இதே வரியைப் பாடுங்கள்" என்று கூறினார் பாதுஷா. மீண்டும் பாடியவர்கள் அதே தவற்றை மீண்டும் செய்தனர். "நீங்கள் பாடுவது தவறு. அந்தச் சொல் இப்படியல்லவா இருக்க வேண்டும்?" என்று அவர் வரிகளைத் திருத்தினார் பாதுஷா.

நன்கு புலமை பெற்றவர்களுக்கே சிறிது கடினமாக இருக்கக்கூடிய சொல்லமைப்பும், கவிதை நயமும் மிக்க அந்தக் கவிதைகள் எழுதப் படிக்கத் தெரியாத தம்முடைய மாணவனுக்கு, பாதுஷாவுக்கு எப்படித் தெரியும் ? ஆசிரியர் திகைத்தார். பாடகர்களுக்குப் பரிசு கொடுத்து அனுப்பிய பாதுஷா ஆசிரியரின் திகைப்பை உணர்ந்தவர் போல், "எனக்கு எழுதப் படிக்கத்தான் தெரியாதே தவிர கேள்வி ஞானம் உண்டு. எதையும் ஒரு முறை கேட்டால் அப்



The following particulars regarding the ownership of 'GOKULAM', the Tamil fortnightly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication :* Madras
2. *Periodicity of its Publication :* Fortnightly
3. *Name of Printer and Publisher :* R. Ananthanarayanan
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-600031
4. *Name of Editor :* T. Sadasivam
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-600031
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital :*
   Bharathan Publications Pvt. Ltd., 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-600031.

R. Ananthanarayanan,
1-3-74 *Publisher*

படியே மனத்தில் பதிந்துவிடும். நீங்கள் நடத்திய இலக்கிய விவாதங்களைப் பல முறை கேட்டிருக்கிறேன். அதனால் சூபிஞானிகளின் கவிதைகள் எல்லாமே எனக்கு மனப்பாடம்'' என்று சிரித்தார். ஆசிரியர் திகைத்துப் போய் அமர்ந்திருந்தார்.

உள்ளே வந்து பாதுஷாவை வணங்கிய பணியாள், மதுராவிலிருந்து மல்லாரி என்ற இளைஞன் காண வந்திருப்பதாகக் கூறினான். அழைத்து வர அனுமதியளித்த பாதுஷா, ஆசிரியரிடம் திரும்பி, ''இந்த இளைஞன் நான்கு புலிகளை ஒரே நாளில் வேட்டையாடியிருக்கிறான். அவனுடைய திறமையைப் பாராட்டிப் பரிசு கொடுக்கத்தான் வரச் சொல்லியனுப்பினேன்'' என்றார்.

மல்லாரி உள்ளே வந்தான். அவனுடைய திறமையைப் பாராட்டித் தன்னுடைய கழுத்திலிருந்து முத்து மாலை ஒன்றைப் பரிசாகக் கொடுத்த பாதுஷா, ''தம்பி! புலி வேட்டைக்குப் போகும்போது பதுங்கியிருக்கப் பரண் கட்டுவார்களே.... நீ எங்கே பரண் கட்டுவாய்?'' என்று கேட்டார்.

''நீர் நிலைகளின் ஓரமாக மரங்களில் கட்டுவேன். அங்கேதானே புலி தண்ணீர் குடிக்க வரும்'' என்றான் மல்லாரி.

''உண்மைதான். ஆனால் காட்டிலே நீண்ட நதி ஓடுகிறது என்று வைத்துக் கொள். அந்த நதியில் ஏதாவது ஓர் இடத்துக்குத்தானே புலி தண்ணீர் குடிக்க வரும்? நீ இன்னோர் இடத்தில் பரண் கட்டியிருந்தால் என்ன ஆவது? நீ பரண் கட்டியிருக்கும் இடத்துக்குப் புலி தண்ணீர் குடிக்க வந்தால்தானே உன்னால் வேட்டையாட முடியும்?''

பாதுஷாவின் கேள்விக்குப் பதில் கொடுக்கஇயலாதுவிழித்தான், மல்லாரி.

''அதனால், நீர் நிலைக்கு அருகே பரண் கட்டாது, கரையான் புற்று இருக்கும் இடமாகத் தேடி அங்கே பரண் அமைத்துப் பார். கரையான் என்றால் மயில்களுக்கு விருப்பம் அதிகம். தேடி வந்து ஆவலோடு தின்னும். அந்த ஆனந்தத்தில் தோகையை விரித்து ஆடும். அந்த ஆடலின் அழகைக் காண மான்களுக்கு ஆவல் அதிகம். அதனால் மான் கூட்டம் மயில்களைச் சுற்றியிருக்கும். புலிகளுக்கு மான் சுவையான இரை. அதனால் மான்களைத் தேடி அவை வரும்'' என்று விளக்கிய பாதுஷாவை வியப்போடு நோக்கினான் மல்லாரி.

''தம்பி! புலி வேட்டைதான் உனது தொழிலா.....? இல்லை, வேறு ஏதாவது தொழில் செய்து வருகிறாயா?' என்று கனிவோடு கேட்டார் பாதுஷா.

''புலி வேட்டை எனது பொழுது போக்குத்தான். எனக்குத் தொழில், 'ஜசியா' வரி வசூல் செய்யும் அதிகாரிகளுக்குக் காவல் போவது'' என்றான் மல்லாரி.

''ஜசியாவா? அப்படி ஒரு வரியா?'' என்று வியந்தார் பாதுஷா.

''ஆமாம், பாதுஷா! அது ஒரு தலை வரி. முஸ்லீம்களில்லாத மக்கள் கட்டாயமாகக் கட்ட வேண்டிய வரி அது. உங்கள் ராஜ்யம் முழுதும் அது வசூலிக்கப்படுகிறது'' என்று விளக்கினார் ஆசிரியர்.

''இது அநியாயம். மதம் அவரவர்களுடைய சொந்த விருப்பத்தைப் பொறுத்தது. எனது ஆட்சியில் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேராதவர்கள் என்பதற்காக மக்கள் மீது வரி விதிப்பதை நான் அவமானமாகக் கருதுகிறேன்'' என்று சினந்தார் பாதுஷா.

''இதனால் கோடிக்கணக்கில் அரசுக்கு வருமானம் வருகிறது'' என்று ஆசிரியர் கூறினார்.

''இருக்கட்டும். வருமானத்தின் தொகை பெரிதல்ல. அதன் தன்மைதான் முக்கியம்.''

''இது உங்கள் மூதாதைகள் முகம்மது கோரியின் காலத்திலிருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது.''

''கோரி முகம்மது இந்த இந்துஸ்தா ன்த்தை வருமானம் கொடுக்கும் சந்தை என்றுதான் எண்ணினர். இதைத் தமது தாய்நாடாக அவர் மதிக்கவில்லே. ஆனல் அவரைப் போலல்லாது இந்த வளமான இந்துஸ்தானத்தை நான் நேசிக்கிறேன். இந்த மக்களே நான் விரும்புகிறேன். இந்த மக்களெல்லாம் விரும்பும் மன்னனக ஆட்சி புரிந்து இங்கேயே மடிய விரும்புகிறேன். என் னைப் பொறுத்தவரை மத வேற்றுமை யின்றி எல்லோரும் எனது குடிமக்களே. அவர்களைப் பாகுபடுத்தி வரி விதிப்பதை நான் வெறுக்கிறேன்'' என்று கூறிய பாதுஷா, பணியாளிடம், அமைச்சரை அழைத்து வரும்படி கூறினர்.

மல்லாரி விடைபெற்றுச் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் பாதுஷா வின் தாய் ஹமீதா பேகம் பரபரப் போடு உள்ளே வந்தாள். அவள் கையிலே எதையோ மூடி எடுத்துக் கொண்டு வந்தாள்.

'' ஜலால்! அந்தப் பாழாய்ப் போன வெள்ளேக்காரனிடம் உனக்கு ஏதாவது சண்டையா ?'' என்று கேட் டாள் பாதுஷாவின் தாய்.

''இல்லேயே, அம்மா! என்னே மதம் மாற்ற அவர்கள் எண்ணியபோது நான் அவர்களே விலக்கிவிட்டேன். அந்தக் கோபமாக இருக்கும். ஏன்?'' என்று தாயாரிடம் கேட்டார் பாதுஷா.

'' நம்முடைய புனிதமான திருக் குரானே நாயின் கழுத்தில் கட்டி நகர் முழுதும் விரட்டி அவமானம் செய் திருக்கிறர்கள். அவர்களேச் சும்மா விடக் கூடாது'' என்று கூறிய ஹமீதா பேகம், தான் கொண்டு வந்திருந்த தைத் திறந்தாள். அதில் ஒரு புத்தகம் இருந்தது. பாதுஷா அதை ஆவலோடு எடுத்துக் கொண்டார்.

'' இது அவர்களுடைய வேத நூலாகிய பைபிள். நம்முடைய குரானே அவர்கள் அவமானப் படுத்தியதைப் போலவே நாமும் பைபிளே அவ மானப்படுத்த வேண்டும். இந்தப் பைபிளேக் கழுதையின் கழுத்தில் கட்டி விரட்டினல்தான் என் ஆத்திரம் அடங் கும். இதற்கு ஏற்பாடு செய்'' என்று கூறி விடை பெற்ருள் தாய்.

ஆசிரியர் பாதுஷாவின் முகத்தையே ஆவலோடு நோக்கினர்.

'' என்ன செய்யப் போகிறீர்கள், பாதுஷா ? தாயின் வேண்டுகோளே நிறைவேற்றப் போகிறீர்களா ?'' என்று ஆவலோடு கேட்டார் ஆசிரியர்.

''இல்லே. நான் சாதாரண ஜலாலு தீனக இருந்தால் தாயின் வேண்டு கோளேக் கண்டிப்பாக நிறைவேற்றி

விரைவில் ஆரம்பமாகிறது
வாண்டுமாமா
எழுதும் தொடர்கதை

வைப்பேன். ஆனல் நான் குடிமக்கள் எல்லாருக்கும் வழிகாட்ட வேண்டிய பாதுஷா ஜலாலுத்தீன். மதங்களே நேசிக்கத் தெரியாத எவனே ஒரு முட்டாள் தவருன ஒரு செயலேச் செய்துவிட்டான் என்பதற்காக நானும் பதிலுக்கு ஒரு தவருன செயலேச் செய்ய லாமா ? அப்படிச் செய்தால் எனக்கும் அவனுக்கும் என்ன வேறுபாடு ? இந்தச் செயலேச் செய்தவனேக் கண்டு பிடித்துத் தண்டிப்பேனே தவிர இதற் காக இன்னொரு மதத்தை இழிவுபடுத் தும் செயலேச் செய்ய மாட்டேன் '' என்று அமைதியாகப் பதில் அளித்தார் பாதுஷா ஜலாலுத்தீன்.

'' ஜலால்'' என்று தம் தகுதியையும் மீறி அழைத்த ஆசிரியர் உணர்ச்சிப் பெருக்கில் பாதுஷாவை மார்போடு அணேத்துக் கொண்டு ஆனந்தக் கண் ணீர் வடித்தார். ''கல்வியறிவின் பயனக அறிந்து கொள்ள வேண் டியதையெல்லாம் கல்வியறிவு இல்லாம லேயே உணர்ந்து கொண்டுவிட்டாய். மன்னனுக்கு இன்றியமையாத குணம் மத வெறி இல்லாததுதான். எழுதப் படிக்கத் தெரியாத நீ, கல்வி கேள்வி களில் சிறந்த மன்னர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து மக்களின் மனத்தில் நீங்காமல் வாழ்வாய் '' என்று வாழ்த்தினர்.

ஆசிரியரின் வாழ்த்து வீண் போக வில்லே. தம்முடைய மத வெறி இல் லாத் தன்மையாலும், ஆட்சித் திறமை யாலும் மொகலாய மன்னர்களுக்கெல் லாம் வழிகாட்டியாக விளங்கிய ஜலாலுத்தீன் மக்களின் மனத்தில் அழியா இடம் பெற்ருர். அந்த ஜலா லுதீன் வேறு யாருமல்ல, **பாதுஷா அக்பரேதான் !**

ஏழாவது இளவரசன்

வாண்டுமாமா

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனது வாழ் நாள் முடியப் போகும் வேளையில் தன்னுடைய ஏழு பிள்ளைகளையும் அருகே அழைத்



தான். ''என் அருமைப் புதல்வர்களே! நான் இறந்த பிறகு உங்களில் மூத்தவன் இந்நாட்டின் மன்னனாக வேண்டும். அவனுக்குப் பிறகு அடுத்தவன். இப்படியே இந்தச் சிங்காதனம் உங்களுக்கு உரிமையாகும். ஆனால் நான் சொல்லுகிறபடி கேட்டீர்களானால் உங்களுக்கு எவ்வித இன்னலும் ஏற்படாது. வடக்குத் திசையிலுள்ள மாயாஜால மலைக்கு மட்டும் போய்விடாதீர்கள். எத்தனையோ பேர் அதன் மர்மத்தை அறியப் போயிருக்கிறார்கள். ஆனால் யாருமே திரும்பி வந்ததில்லை'' என்று கூறிய மன்னரின் ஆவி பிரிந்தது.

மூத்த மகன் சிங்காதனமேறினான். மாயாஜால மலைக்குப் போய் அங்குள்ள மர்மத்தைக் காண வேண்டும் என்ற அடக்க முடியாத ஆவலை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. தகப்பனாரின் எச்சரிக்கையையும் மதிக்காமல் ஒரு நாள் அந்த மர்ம மலையை நோக்கிக் கிளம்பினான். ஆனால் மறுபடியும் அவன் நாடு திரும்பவில்லை. இரண்டாவது இளவரசன் பதவி ஏற்றான். அந்த அண்ணனுக்குத் தம்பிதானே இவன். இவனுக்கும் மாயாஜால மலையின் மர்மத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வம் பிறந்தது. போனவன் போனவன்தான். இப்படியே மற்ற சகோதரர்களும் அடுத்தடுத்துப் போய்த் திரும்பவில்லை. கடைசியாக ஏழாவது இளவரசன் சிங்காதனமேறினான்.

குட்டி இளவரசனுக்கு மாயாஜால மலைக்குப் போக ஆர்வம் இல்லாவிட்டாலும் அண்ணன்மார்களின் கதி என்ன என்பதை அறிந்து வர வேண்டும் என்று விரும்பினான். ஆனால் நாட்டு மக்கள் காலஞ்சென்ற மன்னரின் கடைசி மகனையும் இழக்க விரும்பாதவர்களாக அவனை அங்கு போக விடாமல் தடுத்து வந்தனர். இப்படிச் சில வருஷங்கள் ஓடிவிட்டன. சின்ன இளவரசனும் வளர்ந்து வாலிபனானான். அவனுடன், திரும்பி வராத அண்ணன்மார்களின் நினைவும் வளர்ந்து கொண்டு வந்தது. ஒரு நாள் அதிகாலையில் தனது முக்கியமான நண்பர்கள் சிலருடன் மாயாஜால மலைக்குக் கிளம்பி விட்டான்.

இரு பக்கமும் உயர்ந்த மலைகளிடையே உள்ள கணவாய் வழியே அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு புள்ளி மான் துள்ளி ஓடியது. அதைப் பின்தொடர்ந்து சென்றார்கள். மின்னலைப் போல் ஓடிய அது இவர்களை வெகு நேரம் வெகுதூரம் அலைக்கழித்துவிட்டு ஒரு கானகத்தினுள் புகுந்து மறைந்துவிட்டது.

மானைத் துரத்திச் சென்றபோது இளவரசன் தன் நண்பர்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டுத் தான் முன்னேறி யிருந்தான். குதிரை ஓட்டத்தில் வல்லவனாயிற்றே! மான் மாயமாக மறைந்ததும் ஏமாற்றத்தினால் சோர்வடைந்த இளவரசன் தன்னந் தனியனாகக் காட்டில் வெகு நேரம் சுற்றியலைந்தான். கடைசியாகத் தூரத்தில் சில கூடாரங்களைக் கண்டதும், ''நம் தோழர்கள் தான் கூடாரமிட்டுத் தங்கி யிருக்கிறார்கள்'' என்று ஆவலோடு குதிரையை விரட்டிக் கொண்டு அருகே போனான். அங்கே அவன் கண்ட காட்சியோ? அவன் தோழர்கள் அத்தனை பேரும்


இறந்து கிடந்தார்கள். எல்லோர் முன்னிலையிலும் உணவும் பானமும் வைக்கப்பட்டிருந்தன. யாரோ இவர்களுக்கு உபசாரம் செய்து விஷ உணவைக் கொடுத்துக் கொன்றிருக்கிறார்கள் என்பதை ஊகிக்க அரச குமாரனுக்கு அதிக நேரமாகவில்லை. துக்கமும் கோபமும் குமுறி எழுந்தன.

''என் அருமைத் தோழர்களே! உங்களைக் காப்பாற்ற முடியாதவனாகிப் போனேன். ஆனால் இதற்குப் பழி வாங்க முடியாத பாவியாகிவிடவில்லை'' என்று சபதம் செய்து கொண்டான். இருட்டு வேளையாகிவிடவே தன் குதிரையை ஓர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டுத் தான் மட்டும் அந்தக் கூடாரத்தின் அருகே இருந்த ஒரு பெரிய புளிய மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். இரவு முழுவதும் அங்கேயே உட்கார்ந்து தன் நண்பர்களின் சடலங்களைக் கண்காணித்து வந்தான்.

இரவு உதிர்ந்து பகல் முளைத்தது. பளபளவென்ற ஒரு குதிரை மீது மினு மினுவென்று ஜ்வலிக்கும் ஒரு வீரன் கூடாரத்தை நோக்கி வந்தான். அவனோடு வந்த வீரர்கள் இறந்து கிடந்த உடல்களை அருகே சுழித்து ஓடிக் கொண்டிருந்த காட்டாற்றில் தூக்கிப் போட்டார்கள். மறுபடியும் கூடாரத்தையும் ஆசனங்களையும் ஒழுங்குபடுத்தி அதில் விஷ உணவு வகைகளையும் பானங்களையும் பரப்பி வைத்தார்கள். இறந்தவர்களின் உடைமைகளை மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பினார்கள். அந்த வீரர்களுக்குத் தலைவனாகப் பள பளக்கும் குதிரை மீதிருந்தவன் சுற்றுப்புறங்களை ஆராய்ந்தபோது இளவரசனின் எடுப்பான குதிரை அவன் பார்வையில் பட்டு விட்டது. ''ஆச்சரியமாக இருக்கிறதே! இறந்த ஒவ்வொருவனுக்கும் ஒரு குதிரை வீதம் குதிரைகள் சரியாகத்தானே இருந்தன. இந்தக் குதிரை இங்கு எப்படி வந்தது?'' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான். அவன் வினாவுக்கு மரத்தின் மீதிருந்து விடை கிடைத்தது. ''அது என்னுடைய குதிரை'' என்று கூறியபடி கீழே குதித்தான் ஏழாவது இளவரசன். ''ஆனால் இங்கு வருபவர்களை இரக்கமின்றி இப்படிக் கொல்லும் நீ யார்? நீ உன் கோட்டைக்குத் திரும்பிப் போகலாம். ஆனால் நான் இக் கொலைகளுக்குப் பழி வாங்காமல் திரும்ப மாட்டேன்'' என்றான்.

சில விநாடிகளுக்கு அந்தக் குதிரை வீரன் பேசவே யில்லை. ஆனால் அவன் முகம் கோபத்தினால் ஜ்வலித்தது. ''நான் உன் சவாலை ஏற்கிறேன். முடியுமானால் என்னைத் தொடர்ந்து வா. என் பெயர் விஷக் கன்னி'' என்றான் தன் தலைப் பாகையை எடுத்துக் கொண்டே.

இளவரசனுக்கு வியப்பான வியப்பு. உற்றுப் பார்த்ததும்தான் அந்தக் குதிரை வீரன் ஒரு பெண் என்பது



தெரிந்தது. கருகருவென்று கடலலை போன்ற கேசம் அவள் பொன்னுடலுக்குப் புதுமைப் பொலிவூட்டியது. இளவரசன் திகைப்பிலிருந்து விடுபடுவதற்குள் விஷக்கன்னி குதிரையின் விலாவில் தன் காலால் உதைத்து விரட்டிக் கொண்டு மின்னலென மறைந்து போனாள். இளவரசன் தன் குதிரை மீதேறி அவளைத் தேடிக் கிளம்பினான். ஆனால் எந்த வழி போனாள் என்பது தெரியாமல் அலைந்து திரிந்து அலுத்துச் சலித்துக் களைப் படைந்து போனான். பசியும் தாகமும் வாட்டி வதைத்தபோது தூரத்தில் மூன்று குடிசைகள் தெரிந்தன. அவற்றை நோக்கிப் போனான். ஒவ்வொரு குடிசையிலும் ஒரு கிழவி வசித்து வந்தாள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். எல்லாரும் இளவரசனை அன்போடு வரவேற்றார்கள். அவன் பசிக்கு ஆகாரம் கொடுத்தார்கள். இளவரசன் களைப்பாறியதும் தான் மேற்கொண்டுள்ள காரியத்தைப் பற்றிக் கூறினான். உடனே அந்த ஒன்பது பிள்ளைகளும் ''விஷக் கன்னிதானே? விடியும் தறுவாயில் இந்த வழியாக இரண்டு தடவை போனாளே. ஆனால் அவள் ரொம்ப அபாயமானவள். நீ அவளைத் தேடிப் போக வேண்டாம். இங்கேயே தங்கிவிடு, எங்கள் பெரிய அண்ணனாக'' என்றார்கள்.

''தங்கிவிடுவதா?... சரிதான் போ! அது நடவாத காரியம். நான் விஷக் கன்னியைச் சந்தித்தேயாக வேண்டும். இதோ என் குத்து வாள், ஈட்டி, முகம் காணும் கண்ணாடி. இவைகளை உங்களிடம் விட்டுச் செல்கிறேன். ஈட்டியிலும் குத்து வாளிலும் ரத்தம் கசியுமானால் கண்ணாடி மங்குமானால் எனக்கு ஏதோ ஆபத்து என்பதை அறியுங்கள். உடனே நீங்கள் என் உதவிக்கு வந்தால் போதும்'' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டான்.



இளவரசன் விஷக்கன்னியைத் தேடிக் கொண்டுபோனான். பலநாட்கள் அலைந்து ஒரு நாள் முழு நிலவு வீசும் இரவில் ஒரு கோட்டையின் முன்னால் வந்தான். பளிங்குக் கற்களால் ஆன அதன் கோபுரங்கள் நிலவொளியில் ஜ்வலித்தன. செங்குத்தானதும், கரடு முரடானதுமான பாறைகளுக்கு மேலே எழுப்பப் பட்டிருந்த அந்தக் கோட்டைக்குள் நுழைய எந்தப் பக்கத்திலும் வழியில்லை. அதற்குள் எப்படி நுழைவது என்று ஆராய்ந்து கொண்டிருக்கும்போது ஓர் இடத்தில் மலைகளுக்கிடையே இருந்து பலமான குறட்டைச் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தான். நிலவின் வெளிச்சத்திலே பாறைகளுக்கிடையே உள்ள ஒரு பள்ளத்தாக்கில் ஒரு கிழவன் முடங்கிப் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். குத்தும் பாறைகள் வழியே மெதுவாகக் கீழே இறங்கிக் கிழவரை உலுக்கி எழுப்பியதும் அவர் ''யாரது? இங்கு பாம்புகளும் பறவைகளும்தானே வரும்? நீ யார்?'' என்று கேட்டார். இளவரசன் தன்னைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி ''நான் விஷக் கன்னியைத் தேடி வந்திருக்கிறேன்'' என்றான்.

''விஷக் கன்னியையா? அவள் நாசமாகப் போக! எத்தனையோ ஆயிரம் உயிர்களைக் கொள்ளை கொண்ட அவள் என்னை மட்டும் ஏனோ உயிருடன் விட்டிருக்கிறாள். என்னால் இங்கிருந்து தப்பவும் முடியாது'' என்றார் கிழவர். தனக்கு எப்படியாவது உதவ வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான் இளவரசன்.

''நான் சொல்கிறபடி செய். தினம் சூரியோதயத்தின்போது நல்முத்துக்களால் ஆன ஆடை யணிந்து அவள் தனது பளிங்கு மாளிகையின் உப்பரிகையிலே நின்று சுற்று முற்றும் பார்ப்பாள். அவளுடைய ஆளுகைக்குட்பட்ட பிராந்தியம் முழுவதையும் அங்கிருந்து காண முடியும். தன் நாட்டு எல்லைக்குள் யார் வந்தாலும் அவள் பார்வையிலிருந்து தப்ப முடியாது. அது மனிதனோ மிருகமோ — புதியதாகக் கண்டால் பயங்கரமான ஒரு கூச்சல் போடுவாள். அதைக் கேட்ட யாரும் உயிரோடிருக்க முடியாது. பீதியினால் செத்துப் போவார்கள். அந்தப் பளிங்கு மாளிகையின் உப்பரிகையின் கீழே ஒரு குகை உள்ளது. அதில் போய் ஒளிந்து கொள். உன் முன்னால் இந்தக் குச்சியைப் பிடித்துக் கொள்'' என்று கூறி ஒரு கவட்டைக் குச்சியைக் கொடுத்த கிழவர் ''அவள் மூன்று முறை கூச்சல் போடுவாள். நீ பீதியடையாமல் அவள் முன்னால் இந்தக் குச்சியைப் பிடித்தபடி தைரியமாகப் போ. அவள் மந்திர சக்தி மறைந்து போகும்'' என்று கூறி இளவரசனை அனுப்பி வைத்தார்.

இளவரசன் கிழவர் சொன்னபடியே நடந்து கொண்டான். மூன்றாவது கர்ஜனையின்போது தன் மறைவிடத்திலிருந்து தைரியமாக வெளிப்பட்டுப் பளிங்கு மாளிகையின் உப்பரிகையின் மீதுள்ள அழகியின் முன்னால் போய்க் கம்பீரமாக நின்றான்.

அவனைக் கண்ட அந்த அழகியான விஷக்கன்னி ''என் கர்ஜனையைக் கேட்டால் சுருண்டு விழுந்து உயிர் துறப்பார்கள். ஆனால் நீ உயிரோடு என் முன் நிற்கிறாய். ஆகவே என்னை நீ வெற்றி கொண்டு விட்டாய். இனி நான் உன்னுடையவள். என் கணவர் நீங்கள்தான். என் நாட்டின் அரசரும் இனி நீங்கள்தான், வாருங்கள்'' என்று அழைத்தாள். ஆனால் எப்படி அந்தக் கோட்டைக்குள் போவது? வழி ஏது? இருந்தது. அவள் தன் நீண்ட கூந்தலை உப்பரிகையிலிருந்து தொங்க விட்டாள். அது இளவரசன் கைக்கெட்டும் வரை வளர்ந்தது. இளவரசன் கயிற்றைப் போல அதைப் பற்றிக் கொண்டு, மேலே ஏறி அவள் அருகே சென்றான்.

'' உங்கள் விருப்பம் எதுவானாலும் அதை நிறைவேற்றுகிறேன். கூறுங்கள்'' என்றாள் இளவரசனை மணக்க இருந்த விஷக்கன்னி.

''மலை இடுக்குகளிலே முடங்கிக் கிடக்கும் அந்த முதியவரை விடுதலை செய்து அவர் நாட்டுக்கு அனுப்பி வை'' என்றான் இளவரசன்.

''இன்றோடு என் ஆட்சி முடிந்தது. இனி நான் வேட்டையாடப் போகமாட்டேன். இனி இந்த நாட்டைப் பாது



காப்பது உங்கள் பொறுப்பு'' என்றாள் விஷக்கன்னி. இளவரசனை மணந்து கொண்டதும், ''இங்குள்ள எல்லாமே உங்களுடையவை'' என்று கூறி அவனைத் தன் அற்புதமான குதிரையிடம் அழைத்துப் போனாள். ''நீக் கொழுந்துக் குதிரையே! இவர்தான் இனி உன் எஜமானர். என்னைக் காப்பாற்றியது போலவே இவரையும் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறி அதன் நெற்றியில் முத்தமிட்டு, அதன் கடிவாளத்தைத் தன் கணவனான இளவரசனின் கையில் கொடுத்தாள்.

அன்று முதல் விஷக்கன்னியின் கணவனாகி விட்ட இளவரசன் தினமும் நீக் கொழுந்தின் மீது ஏறிக் கானகத்தில் வேட்டையாடச் செல்வான். அவன் கழுத்திலே முத்துச் சிப்பியினாலான ஒரு சிறு பேழையினுள் விஷக் கன்னியின் சுருள் முடி இருந்தது. தன் சக்தியை யெல்லாம் அதில் வைத்துக் கொடுத்திருந்தாள் விஷக் கன்னி. ஒரு நாள் ஒரு மானைத் துரத்திச் சென்ற இளவரசன் அதை ஒரே அம்பில் வீழ்த்தினாலும் கூட மான் ஓடும் நதியில் விழுந்து விட்டதால் அதை எடுக்க நதியில் குதித்து நீந்த வேண்டி வந்தது. அப்போது கழுத்திலிருந்த முத்துச்சிப்பி மாலை கழன்று நழுவிப் போய்விட்டது. இது இளவரசனுக்குத் தெரியாது. நதியின் வேகத்தில் முத்துப் பேழை அடித்துச் செல்லப்பட்டு வெகு தூரத்தில் போல் ஒரு செம்படவனிடம் சிக்கியது. அதை அவன் அந்நாட்டு மன்னரிடம் சேர்ப்பித்து விட்டான்.

பேழையினுள்ளிருந்த அழகிய சுருள் முடியைக் கண்ட அரசர் அதன் வனப்பில் மயங்கி விட்டார். உடனே தம் மந்திரியை அழைத்து ''இந்த முடிக்கு உரிய பெண் யார் என்பதை நான் அறிய வேண்டும். இல்லா விட்டால் உமது உயிர் பறிக்கப்படும்'' என்றார். பாவம் மந்திரி! ஏதோ ஒரு சுருள் முடியைக் காட்டி அதற்குரிய பெண்ணைக் கொண்டுவா என்றால் என்ன செய்வார்? ஆனால் அவர் மதிமந்திரியாயிற்றே! ஏதாவது செய்துதானே ஆக வேண்டும்? அந்த நாட்டின் எல்லையில் இருந்த ஒரு சூனியக்காரியின் உதவியை நாடினார். அவள் ரொம்பப் பொல்லாதவள். அவளுக்குத் தெரியாத விஷயமே கிடையாது. முடியைக் கண்டதுமே, ''இது விஷக் கன்னியுடையதல்லவா?'' என்றாள். அதைக் கேட்ட மன்னர், ''உடனே எப்படியாவது அவளை என் மனைவியாக்கி வை.

உனக்கு நிறையப் பொற்காசுகளைக் குவிக்கிறேன்'' என்றார்.

சூனியக்காரி தன் குடிசைக்குத் திரும்பினாள். விஷக் கன்னியைக் கொண்டுவரத் திட்டம் தீட்டினாள். மந்திரங்களை உச்சாடனம் செய்தாள். கானகத்திலே காய்ந்த இலைகளுக்கடியிலிருந்த பாம்புகளெல்லாம் அவளை வந்து சூழ்ந்துகொண்டன. எத்தனை விதப் பாம்புகள். அப்பப்பா! அவள் கொஞ்சமும் பயப்படவில்லை. பாம்புகளைத் தன் உள்ளாடைகளுக்குள் மறைத்துக் கொண்டாள். பாம்புகளைக் கொண்டு ஒரு படகே அமைத்தாள். அதை வலிக்க ஒரு பெரிய பாம்பையே கோலாகப் பயன்படுத்தினாள். பாம்புப் படகை ஆற்றில் செலுத்தியபடி விஷக் கன்னியின் நாட்டுக்கு வந்து விட்டாள்.

இளவரசன் வழக்கப்படி வேட்டையாடிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான் தனது தீக்கொழுந்துக் குதிரை மீது. அப்போது வழியில் சூனியக்காரி ஒரு பரிதாபமான கிழவி போலப் பாதையோரத்தில்உட்கார்ந்திருந்தாள். கருணை உள்ளம் கொண்ட இளவரசன் அவள் நிலை கண்டு விசாரிக்க, அவள் உள்ளம் உருகும் ஒரு பொய்க் கதையைக் கூறி அவனைக் கவர்ந்துவிட்டாள். இளவரசன் கிழவியைத் தன் குதிரை மீது ஏற்றிக் கொண்டு அரண்மனைக்குக் கிளம்பினான். கிழவியைத் தன் முதுகில் ஏற்றியதுமே குதிரை அவளை ஏற்க மறுத்துத் தன் உடலைக் குலுக்கிக் கனைத்தது. இந்தச் சூசகத்தை உணராத இளவரசன் அவளைத் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்துப் போய்த் தன் மனைவியிடம் விட்டு ''பாவம், கிழவி, இவள் வேதனையைப் போக்கி வேண்டியதைக் கொடுத்து அனுப்பு'' என்று கூறினான். தான் அழைத்து வந்திருப்பவளால் தனக்கே அபாயம் வரப் போகிறது என்பதை அவன் அறியவில்லை, பாவம்!

சூனியக்காரக் கிழவி தன் மாயா சக்தியினால் விஷக் கன்னியை மயக்கிவிட்டாள். அக்கிழவியை ராணி தன் உயிருக்கும் மேலாக நேசிக்கலானாள். இந்த நிலையில் கிழவி தன் கூனி வேலையைத் தொடங்கினாள். ''உன்னுடைய ரகசியத்தை அறிந்து உன்னைத் தன்வயப்படுத்திக் கொண்டு விட்ட உன் கணவன் தன் ரகசியத்தை மட்டும் உன்னிடம் சொல்லவில்லை பார்த்தாயா?'' என்றாள்.

''அவரிடம் ரகசியம் ஏதும் இருந்தாலல்லவா சொல்வதற்கு?'' என்றாள் விஷக்கன்னி வெகுளியாக.

''ஒன்றுமே இல்லையா? அசட்டுப் பெண்ணே, பெண்களே இப்படித்தான் ஏமாந்து போகிறார்கள். வெகுநாள் வரை யாராலுமே வெல்ல முடியாத உன்னை இவர் வென்றார் என்றால் அதற்கு ஏதோ மர்மம் இருக்கத்தானே வேண்டும்? இதுகூட உனக்குத் தெரியவில்லையா? உன்னை அவர் நேசிப்பது உண்மையானால் அவர் தன் இரகசியத்தை உனக்குச் சொல்லியிருப்பார். எப்போது சொல்லவில்லையோ அப்போது உன்னிடம் அவருக்குப் பூரணமான நம்பிக்கை இல்லை என்றுதானே அர்த்தம்?''

கிழவியின் போதனை விஷக்கன்னியிடம் வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தது. கணவனைக் குடையலானாள். முடிவில் அவனிடமிருந்து அறிய வேண்டியதையும் அறிந்து கொண்டாள். ''என்னிடம் ஒரு மந்திர வாள் இருக்கிறது. அதன் மகிமையினால்தான் எனக்கு மகத்தான பலமும் சக்தியும். இரவு பகல் எந்நேரமும் அது என்னுடனேயே இருக்கும். இந்த இரகசியத்தை நீ யாரிடமும் கூறுவதில்லை என்று உறுதி கொடு'' என்று தன் மனைவியிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டான் இளவரசன். விஷக்கன்னி கணவனுக்கு உறுதி அளித்தாலும் அந்த ரகசியத்தைக் கிழவியிடம் அவளால் சொல்லாதிருக்க முடியவில்லை. அப்படி ஒரு மயக்கத்தை அவளிடம் ஏற்படுத்தி இருந்தாள் சூனியக்காரி.

நான்கு நாட்களாயிற்று. அன்று இரவு எல்லாரும் தூங்கும்போது கிழவி இளவரசனின் அறைக்குள் புகுந்து அவன் தூங்கிக் கொண்டிருக்கும்போது அருகே இருந்த மந்திர வாளை எடுத்து ஜன்னல் வழியே நதியில் வீசி எறிந்து விட்டாள். காலையில் இளவரசன் கண் விழித்ததும் அவன் கை அருகே வாளைத் தேடின. அது எப்படி இருக்கும்? அவனால் எழுந்திருக்கவே முடியவில்லை. அப்படி ஓர் அசதி. அவன் உடலின் சக்தியெல்லாம் போய் விட்டது. குடுகுடு கிழவியைப் போல எழுந்து நிற்கவும் முடியாத நிலையில் தவித்தான். பணியாளர்கள் ஓடிவந்தார்கள். உதவினார்கள். திடீரென்று அரசனுக்கு ஏற்பட்ட அவல நிலை அரண்மனை யெங்கும் பரவி அல்லோல கல்லோலப்பட்டது.

இந்த வேளையில் கிழவி தன் சுயரூபத்தைக் காட்டலானாள். சூனியக்காரியாக மாறினாள். அவளிடமிருந்து பாம்புகள் சீறிக் கொண்டு கிளம்பின. பணியாளர்களையும் வேலையாட்களையும் பயங்கரமாகக் கடித்துக் கொன்றன. விஷக்கன்னியையும் பாம்பைக்காட்டியே தன்னுடைய பாம்புப் படகுக்குக் கூட்

டிப் போனுள். படகில் ஏறி அவளுடன் தன் நாட்டுக்குப் போய், மன்னரிடம் அவளை ஒப்புவித்து பொன் மூட்டையையும் பெற்றுக் கொண்டாள்.

இதே நேரத்தில் இளவரசனைச் சகோதரர்களாக ஏற்றுக் கொண்ட ஒன்பது தம்பிமார்களும் வழக்கம்போலக் குத்துவாள், ஈட்டி, கண்ணாடிகளைப் பார்த்த போது முதலிரண்டில் ரத்தமும் கண்ணாடியின் ஒளி மங்கவும் கண்டு, ''அண்ணனுக்கு ஏதோ அபாயம். வாருங்கள் போகலாம்'' என்று கிளம்பி விட்டார்கள் பறக்கும் பாதுகைகளை அணிந்து கொண்டு. விஷக் கன்னியின் அரண்மனைக்கு வந்தவர்கள் அங்குள்ள காட்சியைக் கண்டு கலங்கினார்கள்.

ஒன்பது தம்பிகளும் உடனே நதிக்கு ஓடினார்கள். ''நதியில் மீன் நிறைய இருக்குமே. அதைப் பிடித்து வந்து பக்குவப்படுத்தி அண்ணனின் பசிக்குக் கொடுப்போம்'' என்று. நதியில் போய் வலை வீசினார்கள். வலையில் ஒரு பெரிய மீன் சிக்கியது. அதன் உடலில் குத்தி நின்றது பளபளக்கும் ஒரு கத்தி. சூனியக்காரி வீசிய மந்திர வாள்தான் அந்த மீனின் உடலில் அப்படிப் பதிந்திருந்தது. தம்பிகளுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. மந்திர வாளை அதன் உடலிலிருந்து எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள் அரண்மனைக்கு. இளவரசனின் அருகே அதை வைத்தார்கள். அதன் ஒளி பட்டதுமே அவன் உடலில் புதிய சக்தி தோன்றியது. அதைக் கையில் எடுத்ததுமே பூரண பலமும் திரும்பிப் பழைய இளவரசனாகி ''எங்கே என் அருமை மனைவி?'' என்றான்.

''அதைப் பற்றி எங்களுக்கு ஏதும் தெரியாது. ஆனால் அரண்மனையில் கிழவியாக இருந்த சூனியக்காரி தன்னுடன் உன் மனைவியைப் பாம்புப் படகில் வைத்துக் கொண்டு போனதாக அரண்மனைப் பணியாட்கள் கூறினார்கள்'' என்றனர்.

அடுத்த விநாடி இளவரசன் தன்னுடைய தீக்கொழுந்துக் குதிரைமீது ஏறினான். ''உன் எஜமானி இருக்கும் இடத்துக்குப் போ'' என்று கட்டளை இட்டான். அது மந்திரக் குதிரை. மின்னலென வானத்தில் பறந்தது. விஷக் கன்னியை விற்கப்பட்ட ராஜ்யத்தில் போய் இறங்கியது. ஊருக்கு வெளியே ஒரு குடிசை. அதில் ஒரு கிழவி. இளவரசனின் பசியாற்றிய அவள் அந்த ஊரின் நடப்பையும் கூறினாள்.

''எங்கள் மன்னனுக்கு இன்னும் சில தினங்களில் திருமணம் ஆகப்போகிறது. ஆனால் அதிசயம். அந்த அசட்டுப் பெண் கையில் விஷக் கோப்பையுடன் இருக்கிறாள். எங்கள் மன்னரை மணக்க அவளுக்குக் கசக்கிறதாம். எங்கேயோ இருந்த அவளை அவள் அழகுக்காக அரசர் பெரும் பொன் கொடுத்து வாங்கி இருக்கிறார்'' என்றாள்.

''அவள் பெயர் விஷக் கன்னியா?'' என்று கேட்டான் இளவரசன்.

''ஆமாம். அப்படித்தான் சொன்னார்கள். நாளைக்கு நான்கூட மணப் பெண்ணைக் காணப் போகிறேன். இந்நாட்டுப் பிரஜைகளெல்லாம் புது மண பெண்ணுக்குப் பரிசு தர வேண்டும். என் பரிசை நாளைக்குத் தரப் போக வேணும்'' என்றாள் கிழவி. இளவரசன் தன் பரிசாகத் தன் மனைவி அளித்த மோதிரத்தைக் கிழவியிடம் கொடுத்து அனுப்பினான்.

கிழவி இளவரசனின் மோதிரத்தைக் காட்டவே அவள் உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் நிமிர்ந்து ''இதைக் கொடுத்தது யார்? அவர் எங்கிருக்கிறார்?'' என்று கேட்டாள்.

''என் குடிசையில் உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கிறார்'' என்றாள் கிழவி.


''அவரிடம் சொல்லு. திருமணத்தன்று காலையில் நான் நதிக் கரையிலுள்ள கோவிலுக்கு வருவேன். அதன் பிறகு நடக்க வேண்டியதை அவரையே முடிவு செய்து கொள்ளச் சொல்.''

செய்தியுடன் திரும்பினாள் கிழவி.

திடீரென்று மணப் பெண்ணிடம் மகிழ்ச்சி நிலவுவதைக் கண்ட மன்னரும் மற்றவரும் அவள் மனம் மாறிவிட்டதாக எண்ணினார்கள். திருமண நாள் அன்று விஷக் கன்னி அற்புதமாக அலங்காரம் செய்து கொண்டு ஆலயத்துக்குக் கிளம்பினாள். ஆற்றங் கரை ஓரமாக அன்னம் போல நடந்து போனாள்.

அப்போது திடீரென்று ஒரு மின்னல் வெட்டியது. குதிரையின் கம்பீரமான கனைப்பொலியும் குளம்பொலியும் கேட்டன. கூடியிருந்தவர்களின் கண்கள் குருடாகும்படியான ஒளி வெட்டியது.

தீக்கொழுந்துக் குதிரை மீது வந்த இளவரசன் குபீரென்று பாய்ந்து வந்து விஷக் கன்னியாகிய தன் மனைவியை அள்ளி எடுத்துக் குதிரை மீது அமர்த்திக்கொண்டான். குதிரை தன் இரு எஜமானர்களையும் ஒன்று சேர்த்துவைத்த மகிழ்ச்சியில் விண்ணிலே மிதந்தது. எல்லோரும் திக்பிரமை பிடித்துப் போய் நின்றிருந்தார்கள். எவராலும் ஏதும் செய்ய முடியவில்லை. விஷக் கன்னியும் ஏழாவது இளவரசனும் தங்கள் நாட்டுக்குத் திரும்பி இன்பமுடன் பல காலம் வாழ்ந்து வந்தார்கள்.


ஐயோ! பெருச் சாளி!
சிரிக்கச் சிரிக்க..!
சாமா
"தாத்தா எங்கேடா போகிறார்?"
"அழுகிற குழந்தையைச் சமாதானப்படுத்துகிறேன் என்று கிளம்பினார்!"
"எங்கே, ஐ. நா. சபைக்கா?"
அம்மாள்: நல்ல வேளை தப்பினேன். தவறி இதில் விழுந்திருந்தால்...?
பையன்: இல்லை, இதில் நீங்கள் விழவே முடியாது. ஏனென்றால் இது 'மேன் ஹோல்', பெண்களுக்கல்ல!
பாங்கி
"சாமி! காசு இருந்தாப்போடுங்க!"
"இங்கே காசுமில்லே பணமுமில்லே, போய்வா!"
"ஐயோ, பாவம்! நம்மைப்போல இது ஏழை பாங்க் போலிருக்கு!"
"ஏண்டா லேட்டுன்னு கேட்டால், நெருப்பை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தேன் என்கிறயே..."
"ஊரில் எங்கே நெருப்புப் பிடித்துக் கொண்டால் உனக்கு என்ன?"
"உங்கள் வீட்டில்தான் சார் நெருப்புப் பிடித்துக் கொண்டது...!"
? ? ? ? ?



ஒரு சமயம் பிரும்மா திருமாலின் பெருமையை எண்ணித் தியானம் செய்கையில் ஆனந்தக் கண்ணீர் பெருக அதிலிருந்து ஒரு விசித்திரப் பிறவி தோன்றுகிறது.
குரங்கு, கரடி இவற்றுக்கு இடைப்பட்ட இப்பிறவியை 'ரிஷம்' என்போம்.
ரிஷன் மேரு மலையிலுள்ள ஒரு நீர் நிலைக்கு வந்தபோது அந்திப் பொழுது.
இந்த ஏரிக்குள்ளிருப்பவன் என்னையே முறைத்துப் பார்க்கிறான். நான் செய்வதைப் போலவே செய்து என்னைக் கேலி செய்கிறான்.
ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
6
ரிஷனது குரங்கு புத்தி தலைதூக்க.....
இவனைச் சும்மா விடப் போவதில்லை. என்ன செய்கிறேன் பார்.
நீரில் தெரிந்த பிரதிபிம்பம் கைக்கு அகப்படுமா? பகுத்தறியும் திறன் அற்ற ரிஷனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது
பயல் எப்படியோ தப்பி விட்டான்... ஆ, ஐயோ! இதென்ன கோலம்? நான் பெண்ணாக மாறிவிட்டேனே, அடக் கடவுளே!
அவன் அழைக்க வந்தவர்களே போல இந்திரனும் சூரியனும் அந்தப் பக்கமாக வந்தனர்.
இந்த நீர் நிலையில் யார் மூழ்கினாலும் அவர்கள் இரவில் பெண்ணாகவும் பகலில் ஆணாகவும் மாறிவிடுவார்கள். அதன்படி நீ இப்போது பெண்ணாக இருக்கிறாய். இது இரவு நேரம்.


இந்திரனிடமிருந்து வெளிப்பட்ட ஒளி வானரப் பெண்ணின் வாலில் பட, அங்கு ஓர் அழகான ஆண் குழந்தை தோன்றுகிறது.
உன் வாலில் தோன்றியதினால் இவன் வாலி எனப் பெயர் பெறுவான். என்னுடைய பொன் தாமரை மாலையை இவனுக்கு அணிவிக்கிறேன். பகைவனின் பலத்தில் பாதியை இவனுடைய தாக்கும் சக்தி இம்மாலைக்கு உண்டு.
இந்திரன் மறைந்ததும் சூரியனின் ஒளி வானரப் பெண்ணின் கழுத்தில் படுகிறது. அங்கே தோன்றுகிறது இன்னொரு குழந்தை.
பெண்ணே! உன் கழுத்திலிருந்து இக்குழந்தை தோன்றியதினால் இவனுக்கு சுக்ரீவன் என்று பெயரிடுகிறேன்.
(க்ரீவம் என்றால் கழுத்து)
என்னிடம் சகல கலைகளையும் கற்ற ஆஞ்சநேயன் என்ற உத்தமமான வானரனை உன் மகன் சுக்ரீவனுக்கு உறு துணையாக்கிகிறேன். ஹனுமானின் ஆலோசனைப் படியே உன் மகன் கேட்டு நடந்தால் கீர்த்தி பெறுவான்.
தொடரும்



என்ன, பூச்சி பிடியுங்கள்?



தொகுப்பு: எஸ். ராஜஸ்ரீ

மனிதர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் விளைவிக்கின்றன பல பூச்சிகள். நமக்குத் தொந்தரவு கொடுப்பவைகளும் உண்டு. அவற்றைப் பற்றி நாம் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறோமா? நாம் சரியானவை என்று நினைப்பவை பல தப்பாக இருக்கலாம். தப்பு என்று சொல்லிக் கொண்டிருப்பவை பலவும் சரியாக இருக்கலாம்.

இதோ இங்கே நீங்கள் சரிபார்த்துக் கொள்ளச் சில தகவல்கள்!

1. எல்லாக் கொசுக்களும் நம் இரத்தத்தை உறிஞ்சுவதில்லை.
சரியா, தப்பா?

2. பறக்கும் பூச்சிகள் வெகு சில நாட்களே உயிருடன் இருக்கும்.
சரியா, தப்பா?

3. தேனீ நம்மைக் கொட்டிய உடனே இறந்து போய் விடுகிறது.
சரியா, தப்பா?

4. கொசுக்கள் வெளிச்சம் இருந்தால்தான் வரும். இருட்டு அவைகளுக்குப் பிடிக்காது.
சரியா, தப்பா?

5. மின்மினிப் பூச்சிகள் இரவில் ஒளியுடன் மினுக்குவதைப் போலப் பகலிலும் ஒளிவிடக்கூடியவை.
சரியா, தப்பா?

6. பூச்சிகளுக்கு மூளை, இருதயம், நாளங்கள் போன்ற பகுதிகள் இல்லை.
உண்மையா, பொய்யா?

7. கடுமையான குளிரில் எளிதாக உயிர் பிழைக்க முடியாது.
சரியா, தப்பா?

8. பூச்சிகள் தூங்குவதில்லை.
உண்மையா, பொய்யா?

9. தலையைத் துண்டித்துவிட்டாலும் பூச்சிகள் உயிர் வாழ முடியும்.
உண்மையா, பொய்யா?

10. பொதுவாக எல்லாப் பூச்சிகளுமே மனிதர்களுக்குத் தீங்கு செய்பவை.
சரியா, தப்பா?

விடைகள்

1. சரி: பெண் கொசுக்கள் மட்டுமே நம் இரத்தத்தை உறிஞ்சக் கூடியவை. ஆண் கொசுக்களின் வாயில் அதற்கு வேண்டிய சாதனம் இல்லை.

2. தப்பு: சாதாரணமாக அவை அறுபது நாட்கள் வரை உயிர் வாழக் கூடியவை. செல்லுப் பூச்சிகளில் சில ஐம்பது ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

3. தப்பு: கொட்டிய பிறகு தேனீ உயிர் விடுகிறது சரிதான்; ஆனால் ஓரிரு நாட்களுக்குப் பிறகுதான்.

4. தப்பு: இருட்டில்தான் அவை பயமின்றித் தாக்குகின்றன. மறைந்து கொள்வதற்குக்கூட இருட்டான சந்து பொந்துகள், கறுப்புத்துணி போன்றவைகளையே நாடுகின்றன.

5. தப்பு: மாலையில் ஒளிவிட ஆரம்பித்து, நல்ல இருட்டு ஆன பிறகு மின்மினிப் பூச்சிகள் மினுக்குவதை நிறுத்தி விடுகின்றன.

6. பொய்: பூச்சிகள் எல்லாவற்றுக்கும் எல்லா உறுப்புக்களும் உண்டு. கேட்பது, தீண்டுவது, ருசி, பார்வை, வாசனை ஆகிய உணர்வுகளும் உண்டு.


7. தப்பு: கடுங் குளிரிலும் உறை பனியிலும் அவை உயிர் வாழக் கூடியவை. ஆர்டிக் பிரதேசத்திலும் கூடப் பூச்சிகள் இருக்கின்றன.

8. பொய்: அவை நம்மைப் போல் நீண்ட நேரம் தூங்குவதில்லைதான். ஆனால் கொஞ்ச நேரம் அவ்வப்போது ஓய்வெடுக்கின்றன. அதுவே அவைகளுக்குத் தூக்கம்.


9. உண்மை: ஆனால் அதன் பிறகு அவை உணர்ச்சியற்றுப் போகின்றன. அதன்பின் அவை இரை தேடப் போவதில்லை. மற்றச் செயல்களும் குறைந்து விடுகின்றன.

10. தப்பு: பூச்சி இனங்களில் மொத்தம் 7,00,000 வகைகள் இருக்கின்றன. அவைகளில் சில நூறு வகைகளே தீங்கு தருபவை.










பெரிய இடத்துத் திருமணம் — அழகு பழனிச்சாமி



பெரிய இடத்துத் திரும ணந்தான்
ஊரில் நடக்குதாம்! — அந்தப்
பீப்பீ சப்தம் கொட்டு முழக்கம்
காதைத் துளைத்த தாம்!

பெண்ணும் பிள்ளை ஊர்வலத்தில்
காரில் போனதாம்! — அங்கே
பெரிதாய் வாண வேடிக் கைகள்
வானைப் பிளந்ததாம்!

ஊரை யெல்லாம் கூட்டிப் பெரிய
விருந்து நடந்ததாம்! — அங்கே
விருந்து உண்ட மக்க ளெல்லாம்
மயங்கிக் கிடந்ததாம்!

கலப்ப டத்து உணவி னாலே
மயக்கம் வந்ததாம்! — அதைக்
கண்டு பிடிக்க டாக்டர் கூட்டம்
வீட்டில் நிறைந்ததாம்!

சேதி கேட்டு வீட்டைச் சுற்றிக்
கூட்டம் சூழ்ந்ததாம்! — அதைக்
காவல் காக்கப் போலீஸ் லாரி
இரண்டு வந்ததாம்!

காணவாரும் கண்ணனை



பள்ளி செல்லும் கண்ணனைப்
பார்க்க ஓடி வாருங்கள்!

வெள்ளிப் பலகை பையிலே
வெண்ணெய் உருண்டை கையிலே
புல்லாங் குழலும் கூடவே
புதிய எழுது கோலுமாய் —பள்ளி

மணி பதித்த அணிகளும்
மார்பில் ஊசல் ஆடவே
புனித நாமம் நெற்றியில்
பொலியும் எழிலைக் காட்டவே —பள்ளி

மருண்ட கமலக் கண்களும்
மணக்கும் அமுத வாயுமாய்
சுருண்ட முடியில் தோகையும்
துலங்கும் வண்ணத் தேரென —பள்ளி

சரிந்த பட்டு உடையுடன்
தளர்ந்த பிஞ்சு நடையுடன்
கரிய மேனி மின்னவே
கண்ணன் பள்ளி செல்கிறான். —பள்ளி

மு. கோபால்



பேராசை

'புவனை கலைச்செழியன்'

சாலை ஓரத்தில் பிரம்மாண்டமாக வளர்ந்திருந்தது ஓர் ஆலமரம். அந்த மரம் விரித்திருந்த குளிர் நிழலில் அமர்ந்திருந்தாள் ஒரு சிறுமி. அவளுக்கு முன்னால் பரப்பியிருந்த சாக்குப் படுதாவில் வறுத்த வேர்க்கடலை, கொய்யாப் பழம், கை முறுக்கு, வெள்ளரிப் பிஞ்சு, மொச்சைச் சுண்டல் முதலியன கூறு கட்டி வைக்கப்பட்டிருந்தன.

'டண், டண், டண்....' என ஒலித்தது தொலைவிலுள்ள பள்ளி மணி. புற்றீசல்கள் போல் வெளிப்பட்ட பிள்ளைகள் நேரே ஆலமரத்தடிச் சிறுமியிடம் வந்து சூழ்ந்து கொண்டனர். அவரவர் தம் கையிலிருந்த சில்லறைகளை நீட்டித் தேவையான தின்பண்டங்களை வாங்கிக் கொண்டு நகர்ந்தனர். லட்சுமியும் பரபரவென்று வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்தாள்.

''லட்சுமி; இந்தா, இந்தக் காசை முதலில் பிடி!'' என்று சொல்லிக் கொண்டே, அவள் கையில் இருபத்தைந்து பைசா நாணயம் ஒன்றைப் போட்டான் சுந்தர். ''பத்து காசுக்கு மல்லாக் கொட்டை; பத்து காசுக்கு வெள்ளரிக்காய்; மீதி அஞ்சு காசுக்குச் சுண்டல் கொடுத்திடு'' என்று கூறிக் கொண்டே அவளிடம் கையை நீட்டினான் அந்தச் சிறுவன்.

லட்சுமி அவன் கேட்டவைகளை ஒவ்வொன்றாக எடுத்துத் தந்தாள்.

எல்லாவற்றையும் அங்கேயே தின்று தீர்த்த சுந்தர், மறுபடியும் இருபத்தைந்து காசு நாணயம் ஒன்றை ஞாபக மறதியாக அவளிடம் எடுத்து நீட்டினான்.

அவன் ஞாபகமறதியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த லட்சுமி, ''மல்லாக்கொட்டை பத்து காசு; வெள்ளரிப் பிஞ்சு பத்து காசு; மொச்சைக் கொட்டை அஞ்சு காசு. ஆக மொத்தம் இருபத்தைஞ்சு காசு'' என்று சொல்லிக்கொண்டே அந்த நாணயத்தை வாங்கிக் கொண்டாள். உள்ளம் தன்னைச் சுட்டெரிக்க, முகத்தை ஒரு பக்கமாகத் திருப்பிக் கொண்டு காசைச் சுருக்குப் பைக்குள் போட்டு முடிந்தாள். மனத்தின் மாறுபாட்டை எங்கே முகம் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற பயம் அவளுக்கு.

காசைக் கொடுத்துவிட்டுக் குதியாட்டம் போட்டபடி நடந்தான் சுந்தரம்.

அவன் தோற்றம் பார்வையிலிருந்தும் மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்தாள் லட்சுமி.

பொழுது இறங்கிக் கொண்டு வந்தது. இனிமேல் வியாபாரம் எதுவும் நடக்க வழியில்லை. மிச்சம் மீதியிருந்த பண்டங்களை வாரிக் கட்டிக் கொண்டாள் லட்சுமி. சுந்தரம் போன திசைக்கு நேர் எதிர்த் திசையில் இருந்தது அவள் வீடு.

லட்சுமியின் உடலில் இனம் தெரியாத படபடப்பு. அவள் செய்துவிட்ட தவறு மீண்டும் அவள் நினைவில் தோன்றி அவளை அலைக்கழித்தது.

'சின்னப் பிள்ளையை ஏமாற்றிப் பணம் பறித்துக் கொண்டது நியாயமா?' மனச்சாட்சி லட்சுமியைக் கொக்கி போட்டு இழுத்தது.

'கேவலம் இருபத்தைந்து காசு தானே ?' என்று சொல்லி மனத்தை அடக்கப் பார்த்தாள்.

'காசு அற்பமாகவும் ரூபாய் உயர்வாகவும் உனக்குப் படலாம். தொகை எதுவானால் என்ன ? நீ செய்தது திருட்டு' என்று மனச்சாட்சி அவளை மடக்கியது.

வீட்டை நெருங்கிய லட்சுமி, பணத்தை எடுத்து வைக்க நினைத்து இடுப்பில் கையை வைத்தாள். அவளுக்குச் 'சொரேர்' என்றது. வழக்கமாகச் செருகி வைத்திருக்கும் சுருக்குப் பையைக் காணவில்லை !

கடையைக் காலி செய்யும்போது பையை எடுத்து இடுக்கிக் கொள்ள மறந்து விட்டாளோ ? அல்லது வழியில் எங்கேயாவது பாவாடை நாடா தளர்ந்து பை நழுவி விழுந்திருக்குமோ? ஒன்றையும் தீர்மானிக்க முடியவில்லை அவளால்.

இருபத்தைந்து காசுக்குப் பேராசை கொண்ட அவளுக்கு, அன்றைய விற்று முதல் அத்தனையுமே நஷ்டமாகி விட்டது !

மீண்டும் வந்த வழியே திரும்பினாள் லட்சுமி. விழிகள் கவனமாகத் தரையைத் தேட, கால்கள் ஆலமரத்தை நோக்கி அவளைச் சுமந்து சென்றன.

எங்கும் பையைக் காணவில்லை. கடைசியாக ஆலமரத்தை அடைந்தாள் லட்சுமி.


அங்கே.... என்ன ஆச்சரியம் ! லட்சுமியின் சுருக்குப் பையைக் கையில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான் சுந்தரம்.

ஒன்றும் பேசத் தோன்றாமல் திகைப்புடன் அவனைப் பார்த்தாள் லட்சுமி.

''லட்சுமி ! நான் உன்கிட்டே இருபத்தைஞ்சு காசுக்குப் பண்டம் வாங்கித் தின்னுட்டுப் போனேனா! வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் இருபத்தைஞ்சு காசு குறைஞ்சிருந்தது! அப்படின்னா ஒரு இருபத்தஞ்சு காசு எங்கே தொலைஞ்சிருக்கும்னு பார்த்துக்கிட்டே வந்தேன். இங்கே வந்து பார்த்தால் உன் பணப்பை கிடந்தது. இதை உன்னிடம் கொண்டு வந்து சேர்த்துடலாம்னு புறப்பட்டுக்கிட்டு இருக்கேன். நீயும் வந்திட்டே !''

சுந்தரம் முடிக்கக்கூட இல்லை. உடனே லட்சுமி தொடர்ந்தாள் : ''நீ உன் காசை எங்கேயும் தொலைக்கலே சுந்தரம். என்னிடம் ஞாபகமறதியாய்க் கொடுத்துட்டுப் போயிட்டே. நீ வைச்சிருக்கிற பையிலேதான் அந்தக் காசு இருக்கு. எடுத்துக்க.''

இப்படிச் சொல்லிவிட்டுச் சுந்தரத்திடமிருந்து பையை வாங்கி, இருபத்தைந்து பைசா நாணயத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள் லட்சுமி. அப்போதுதான் கனத்த பாரம் ஒன்று தலையைவிட்டு இறங்கிய மாதிரி நிம்மதி பிறந்தது அவளுக்கு.



சிவப்புக் கொடி

ஜி. பாஸ்கர்

பெருங்குடி என்பது ஒரு சிறிய ஊர். அருகில் ஒரு புகை வண்டி நிலையம் உள்ளது. ரயில்வே தண்டவாளம் அந்த ஊர் எல்லையை ஒட்டிச் செல்கிறது. ரயில்வே தண்டவாளத்தையொட்டி ஒரு தென்னந் தோப்பு. மாமரங்களும் உள்ளன. அந்தத் தோப்பைக் காவல் காத்து வரும் ராமசாமிக்கு ஒரே ஒரு மகன். பெயர் பாலன். வயது பத்து. தினந்தோறும் அவன் மாடுகளை ஓட்டிச் சென்று ரயில்வே லைனை ஒட்டியுள்ள புல் தரையில் மேய்த்து வருவான். பாலனுக்கு வேடிக்கை பார்ப்பதில் மிக உற்சாகம்.

அந்த ஊரில் அரசியல் கட்சி ஊர்வலங்கள் நடக்கும். கொடி பிடித்துக் கொண்டு, கோஷங்களைப் போட்டுக் கொண்டு போவார்கள். இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாலனுக்குச் சும்மா இருக்க முடியவில்லை. அவனும் கலந்து கொள்வான். சில சமயங்களில் அந்தக் கூட்டத்தோடு கூட்டமாகப் போவான். எந்தக் கட்சியானாலும் சரி, ஊர்வலமானாலும் அவனுக்கு வேற்றுமை கிடையாது. ஏதோ கூட்டம், ஊர்வலம், வேடிக்கைதான் அவனுக்கு விருப்பம். சில சமயங்களில் அவனுக்குப் பணம் கிடைக்கும், மற்றச் சமயங்களில் சாப்பிட ரொட்டியும் டீயும் கொடுப்பார்கள். இப்படிப் பலவிதமான கொடிகளைப் பிடித்து ஊர்வலம் போயிருக்கிறான். கூட்டத்தோடு சேர்ந்து கோஷங்களும் போடுவான். பல வண்ணக் கொடிகளும், கோஷங்களும் அவனுக்கு மனப்பாடம் ஆகிவிட்டன.

பாலன் சாயங்கால வேளையில் வேடிக்கை பாாக்க அருகில் உள்ள புகை வண்டி நிலையத்துக்குப் போவான். அப்பொழுது கிழக்கேயிருந்து ஒரு ரயில் வண்டியும், மேற்குப் பக்கமிருந்து ஒரு ரயில் வண்டியும் வந்து அந்தப் பெருங்குடி புகைவண்டி நிலையத்தில் சந்திக்கும். பிரயாணிகள் வெளியூரிலிருந்து வந்து இறங்குவார்கள். சிலபேர் அங்கே ரயிலில் ஏறுவார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் பச்சைக்கொடி காட்டுவார். வண்டி புறப்பட்டு விசில் ஊதிக் கொண்டே மெதுவாகச் செல்லும். சில சமயங்களில் ஸ்டேஷன் மாஸ்டர் சிவப்புக் கொடி காட்டுவார். வண்டி நிற்கும்.

வேடிக்கை பார்க்கும் பாலனுக்கு ஒரே ஆச்சரியம்.' ஸ்டேஷன்மாஸ்டர் பச்சைக்கொடி காட்டினால் வண்டி ஓடுகிறது. சிவப்புக் கொடி காட்டினால் வண்டி நின்று விடுகிறது. அவனும் கொடி பிடித்துக்கொண்டு, கோஷங்கள் போட்டுக் கொண்டுதான் போயிருக்கிறான். ஒருவரும் அவனைத் திரும்பிக் கூடப் பார்த்ததில்லை. ஆனால் இவர் கொடி காட்டினால், ரயிலே அல்லவா அவர் சொன்னபடி கேட்கிறது !

பாலன் எண்ணினான். இனி தெருவில் கொடி பிடிப்பதில் பிரயோசனமில்லை. ஒருவரும் கவனிக்கமாட்டேன் என்கிறார்கள். கொடி பிடித்தால் இந்த ஸ்டேஷன் மாஸ்டரைப் போல் கொடி பிடிக்க வேண்டும். ரயில், நான் சொன்னபடி கேட்க வேண்டும். ஆகவே காசு கொடுத்தாலும் சரி, தெருவில் கொடி பிடித்துக் கொண்டு கூட்டத்தில் போகக் கூடாது. பெரியவன் ஆனதும் ஸ்டேஷன் மாஸ்டர் மாதிரியான கொடி பிடிக்க வேண்டும் என்று அவன் மனத்தில் ஒரு தீர்மானம் செய்து கொண்டான். இப்படிச் சில மாதங்கள் சென்றன.

ஒரு நாள் மாலை நேரம். மழைக் காலம். நன்றாக மழை பெய்து ஓய்ந்திருந்தது. மேயச் சென்ற மாடுகளை ஓட்டிக் கொண்டு ரயில்வே லைன் ஓர



மாகப் பாலன் நடந்து வந்துகொண்டிருந்தான். மழை இல்லாமல் இருந்தால் புகை வண்டி நிலையத்துக்கு வேடிக்கை பார்க்கச் சென்றிருப்பான். சீக்கிரமாக வீட்டுக்குப் போய்விடலாம் என்று திரும்பிச் சென்றவனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அன்று பெய்த மழையில், ரயில்வே தண்டவாளத்தின் அடியில் மண் அரித்துக் கொஞ்ச தூரத்துக்கு இடம் பெயர்ந்து கிடந்தது. இன்னும் சிறிது நேரத்தில் வருகிற ரயில் வண்டி, போகிற ரயில் வண்டி, இரண்டும் சென்றாக வேண்டும். என்ன ஆவது? ஆபத்து என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. ஸ்டேஷன்மாஸ்டர் சிவப்புக் கொடி காட்டி ரயிலை நிறுத்துவதை அவன் கவனித்துப் பார்த்திருக்கிறான்.

கொடி பிடிப்பதில் ஆசைப்பட்ட பாலன், உடனே தென்னந் தோப்பில் உள்ள தனது குடிசைக்கு ஓடினான். அங்கே பழைய சிவப்புப் புடவைத் துண்டு ஒன்று கிடந்தது. எடுத்து ஒரு குச்சியில் கட்டினான். ரயில்வே தண்டவாளம் பெயர்ந்த இடத்துக்கு ஒரு நொடியில் வந்து விட்டான். பிடித்தான், சிவப்புக் கொடியை! நடுத் தண்டவாளத்தில் நின்று கொண்டு கொடியுடன் கையை ஆட்டினான்.

மாலை நேரத்தில் பெருங்குடி ஸ்டேஷனை நெருங்கிவந்த ரயில் வண்டி அவனை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தது. ரயில் மோதினால் உயிர் போய்விடுமே என்ற அச்சம் பாலனுக்கு இருந்தாலும், சிவப்புக் கொடி காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே, வெகுநாட்களாக எண்ணிய ஆசை நிறைவேறுகிறதே என்ற உற்சாகத்தில் தைரியமாக நடுத் தண்டவாளத்தில், சிவப்புப் புடவையைப் பிரித்துப் பிடித்துக் கொண்டு நின்று விட்டான். வேகமாக வந்த ரயில் வண்டி, வேகத்தைக் குறைத்தது. அவன் நின்ற இடத்துக்குப் பத்தடி தூரத்தில் வந்து நின்றது.

புகைவண்டியின் டிரைவரும், கார்டும் ஓடி வந்து பார்த்தார்கள். , தண்டவாளம் மண்ணரித்து, இடம் பெயர்ந்து கிடந்தது. புகை வண்டியைப் பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய பாலனுக்குப் பிரயாணிகள் எல்லாரும் வெகுமதிகளும், பரிசுகளுமாகக் கொடுத்தார்கள். ரயில்வே நிர்வாகம் வேறு தனிப்பட்ட முறையில் அவனைப் பாராட்டியது. பாலனது கொடி பிடிக்கும் ஆசையும் நிறைவேறியது.





“குளிருன்னு குளிர், எப்படிப்பட்ட குளிர்? அடேயப்பா! எப்போ சுள்ளுன்னு வெயில் அடிக்கும், ஜில்லுன்னு தண்ணியிலே ஜம்முனு குளிக்கலாம்னு ஏங்கிக்கிட்டிருக்கேன்'' என்று கைகள் இரண்டையும் மார்பின் மீது சேர்த்து இறுக்கிக் கட்டிக் கொண்டு வந்தான் கிட்டு. பேசும் போது அவன் வாயிலிருந்து வெண் புகை வந்தது. அவன் வெளிவிடும் உஷ்ணமான மூச்சுக் காற்றுத்தான் அப்படி வெளியே வந்ததும் வெண் புகையாக மாறியது. இந்த வருஷம் ரொம்பப் பனிதான்.

''அப்படியானால் இப்போதெல்லாம் நீ குளிப்பதே இல்லையா?'' என்று கேட்டார் பரமேசுவரன் தாத்தா. அவர் மழையானாலும் பனியானாலும் வெய்யிலானாலும் குளிர்ந்த நீரில்தான் குளிப்பார். மேலே ஒரு கதர் துண்டைத்தான் போர்த்திக் கொண்டிருப்பார். அதுதான் அவருக்குக் கம்பளி ஸ்வெட்டர்.

''குளிக்காமல் இருப்பேனா? வெந்நீரில் குளிப்பதும் ஒரு குளியலா தாத்தா?'' என்றான் கிட்டு.

அக்கினியும் ஐஸும் அருகருகே!

— விகேயெம் —



''குழாயைத் திறந்தால் வெந்நீராகக் கொட்டணும். குளத்து நீரில் குதித்தால் வெது வெது வென்றிருக்கணும். நீச்சல் குளத்தை வெந்நீரால் நிரப்பி இருக்கணும்? அப்போ எத்தனை குஷியாக இருக்கும் தெரியுமா?'' என்றாள், அப்பாவின் கம்பளிச் சால்வையை உடல் மூடப் போர்த்திக் கொண்டே அங்கு வந்த பட்டு.

''நல்ல ஆசைதான் போ! கடல் நீரில் மிதந்தபடி குளிக்கணும், மூழ்கக் கூடாதுன்னே அன்னிக்கு. இப்போ என்னடான்னா......''

''அதனால் என்னடா கிட்டு? உன் தங்கை ஆசைப்படறது போல் இருக்காதா என்ன? ஊரெல்லாம் பனி பெய்துகொண்டிருக்கும். ஆனால் ஏரிகளிலுள்ள நீர் வெந்நீராகக் கொதிக்கும். குஷியாகக் குளித்து நீந்தலாம். ஒரு பக்கம் எரிமலை கனன்று கொண்டிருக்கும். இன்னொரு பக்கம் பனி மூடிய மலைகளிலிருந்து பனிப்பாறைகள் சரிந்து விழுந்து கொண்டிருக்கும். எங்கு பார்த்தாலும் ஐஸ்வாட்டர் நீர்வீழ்ச்சிகள். அதே மாதிரி பக்கத்துக்குப் பக்கம் வெந்நீர் ஊற்றுக்கள் பீச்சியடித்துக் கொண்டிருக்கும்.''


'' என்ன தாத்தா, இது? ஏதாவது மாயாஜாலக் கதை எழுதப் போறீங்களா? அதற்கான வர்ணனைகளா இதெல்லாம்?'' என்றான் கிட்டு.

மேலே : வைக்கிங்குகளை நினைவுபடுத்தும் ஐஸ்லாந்து மீனவர்.

கீழே : ஐஸ்லாந்துக்கு முதன் முதலில் சென்ற கிறிஸ்துவச் சந்நியாசிகள்.

''அட அசடே! கதையளக்க நான் என்ன உங்கப்பாவைப் போல் எழுத்தாளனா என்ன? நிஜமாகவே அப்படி ஓர் இடம் இருக்கு. இல்லாத எதையும் நான் சொல்லமாட்டேன் தெரிஞ்சுதா? இதோ, இந்தக் கடிதத்தைப் பாரு. உங்களுக்காகத்தான் எழுதினேன். பதில் வந்திருக்கு'' என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தார் பரமேசுவரன் தாத்தா.

கிட்டு பரக்கப் பரக்கக் கடிதத்தை வாங்கிப் படித்தான். அவன் தோள் மீதாக எம்பி எம்பிப் பட்டுவும் அதைப் படித்தாள். **ஐஸ்லாந்திலிருந்து ஹெல்காவும் எரிக்கும் எழுதியிருக்கிறார்கள்,** எங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பதாக...தாத்தா! நீங்கள் இப்போது சொன்ன அதிசயங்களெல்லாம் ஐஸ்லாந்திலேயா இருக்கின்றன?'' என்று கண்கள் அகல விரியக் கேட்டனர் கிட்டுவும் பட்டுவும்.





'' ஆமாம். ஐஸூம் அக்கினியும் உள்ள தீவு என்று அதற்குப் பெயர்'' என்றார் தாத்தா. பிறகு ''கிளம்புங்கள் ஐஸ்லாந்துக்கு. பட்டு உன் ஆசை நிறைவேறப் போகிறது. வெந்நீர்க் குளம், ஏரி எல்லாம் உண்டு அங்கே'' என்று கூறிக் கொண்டே மந்திர மெழுகை எடுத்துக் குழந்தைகளின் புருவத்தில் தடவினார். அடுத்த விநாடி.....

அவர்கள் மூவரும் ஐஸ்லாந்தின் தலைநகரான ரேக்ஜவிக்கில் (Reykjavik) ஒரு திறந்தவெளி நீச்சல் குளத்துக் கருகே நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது காலை மணி ஏழு இருக்கும். ஆனால் அந்த 'ஸ்விம்மிங் பூலி'ல் ஏராளமான பேர் நீந்திக் கொண்டிருந்தார்கள். பட்டு மெள்ளக் குனிந்து தண்ணீரில் கை வைத்துப் பார்த்தாள். அது வெந்நீர்! நல்ல கதகதப்புடன் இருந்தது. அவளுக்கு ஆச்சரியமான ஆச்சரியம். அப்போது அவள் வயதுடைய ஒரு பெண் இவர்களை நோக்கி நீந்தி வந்தவள், ''ஹலோ, நீங்கள் தானே கிட்டுவும் பட்டுவும்?'' என்று கேட்டுக் கொண்டே கரையேறினாள். ''என் பெயர் ஹெல்கா'' என்று வரவேற்கத் தன் கையை நீட்டினாள்.

''வெளியில் இப்படித் தாங்க முடியாத குளிராக இருக்கிறதே ஹெல்கா; இந்த நீச்சல் குளத்தில் மட்டும் எப்படி வெந்நீர்? அடியில் மின்சார சாதனம் ஏதாவது.....?'' என்றாள் பட்டு.

''மின்சார சாதனத்தினால் சூடாக்கப்பட்ட நீரல்ல இது. இயற்கை வெந்நீர் ஊற்றுக்கள் எங்கள் நாட்டில் ஏராளமாக உண்டு. அதிலிருந்து இந்தக் குளத்துக்குத் தண்ணீர் வருகிறது. நான் தினமும் பள்ளிக்குப் போகுமுன் இங்கு வந்து நீந்திக் குளிப்பது வழக்கம்.''

''அதிசயமான நாடுதான். உங்கள் நாட்டைப் பற்றி எங்களுக்கு நிறையச் சொல் ஹெல்கா'' என்றான் கிட்டு.

'' எங்கள் நாட்டின் சரித்திரத்தைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ளுங்கள். ஐஸ்லாந்தை முதன் முதலில் கண்டவர்கள் கிரேக்கர்கள்தாம். கி.மு 300ல். அப்போது இங்கு யாருமே வசிக்கவில்லை. இதற்குத் தூலி (Thule) என்று பெயரிட்டார்கள். இதற்கு ஆயிரம் வருடங்களுக்குப் பிறகுதான் ஐஸ்லாந்து என்ற பெயர் வந்தது. வைக்கிங்கு



களின் கப்பல் இந்நாட்டின் விரிகுடாவில் தங்க நேர்ந்தபோது அங்கு பனிக் கட்டிகளைக் கண்டார்கள். தூலி ஐஸ்லாந்தாகி விட்டது.''

''அப்போதும் இங்கு மனிதர்கள் யாரும் இல்லையா?'' — கிட்டு.

''இல்லை. முதன் முதலில் இங்கு வசிக்க வந்தவர்கள் அயர்லாந்தைச் சேர்ந்த கிறிஸ்துவத் துறவிகள்தான். தனிமையையும் அமைதியையும் நாடி எட்டாம் நூற்றாண்டில் இங்கு வந்து குடியேறினார்கள். ஆனால் அவர்களும் இங்கு நிரந்தரமாகத் தங்கி நாடு நகரங்களை அமைக்கவில்லை.

''கி.பி. 874ல் நார்வே தேசத்துமன்னரின்கொடுமை தாங்காத ஒரு நிலப்பிரபு தம் குடும்பத்துடனும் சுற்றத்தாருடனும் ஒரு கப்பலில் நார்வேயிலிருந்து கிளம்பினார். அவரை அந்தக் கப்பல் இந்த நாட்டில் கொண்டு வந்து ஒதுக்கியது. அவரைப்போலவே பலர் அந்த மன்னரின் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுபட இங்கு வந்து குடியேறினார்கள். அறுபது ஆண்டுகளில் ஐஸ்லாந்தில் இப்படி ஏராளமான பேர் வந்து குடியேறி இதை வாழ்வதற்கு ஏற்ற வகையில் மாற்றி யமைத்தார்கள். எங்கள் தலைநகருக்கு ரேக்ஜவிக் என்று பெயர் வந்ததுக்கும் ஒரு வரலாறு உண்டு. முதன் முதலில் நார்வேக்காரர்களின் கப்பல் வந்து நங்கூரமிட்டது ரேக்ஜவிக் துறைமுகத்தில்தான். அவர்கள் தூரத்தில் பீச்சியடிக்கும் வெந்நீர் நீரூற்றைக் கண்டிருக்கிறார்கள். புகை போல் அது வானத்தை நோக்கிப் பொங்கிப் பொழிவதைக் கண்டு 'ரேக்ஜவிக்' என்றார்களாம். நார்வீஜியன் மொழியில் இதற்குப் 'புகையும் வளைகுடா' என்று பொருள். அந்தப் பெயரே நிலைத்துவிட்டது.

''எங்கள் மொழிதான் ஐரோப்பாவிலேயே மிக மிகப் பழைமையான மொழி. இதற்கு ஐஸ்லாண்டிக் என்று பெயர். இங்கு இன்னமும் இம்மொழி வழக்கிலுள்ளது.''

திறந்த வாய் மூடாமல் ஹெல்கா கூறும் விவரங்களைக் கேட்டு வியந்து போய் உட்கார்ந்திருந்தார்கள் கிட்டுவும் பட்டுவும். ''சரித்திரப் பெருமைகளைக் கூறினாய். உங்கள் நாட்டு இயற்கை வனப்பைக் கூறு'' என்றார்கள்.

'' எங்கள் நாட்டுக்கு மாறுபட்ட குணங்களுடைய தேசம்'' என்று ஒரு பெயர். கால நிலையில், காட்சிகளில், வாழும் முறையில் எல்லாமே ஒன்றுக்கொன்று முரணாகக் காணப்படுவதால். நாட்டின் மத்திய பிரதேசம் முழுமையும் மிக உயர்ந்த மலைகள். எப்போதும் பனி மூடிக் கிடக்கும். கடுமையான குளிர். நாட்டின் எட்டில் ஒரு பாகம் கிளேசியர்களால் மூடப்பட்டிருக்கிறது. மாரிக் காலத்தில் கடுமையான பனிப் புயல் வீசும். உள் நாட்டின் இந்த நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது கடற்கரைப் பிரதேசம். பருவநிலை கதகதப்பாக இருக்கும். மாரியில்கூடப் பனி பெய்வதைக் காண முடியாது. டிசம்பர், பிப்ரவரியில் எங்கள் தலைநகரான ரேக்ஜவிக்கில் நியூயார்க், எடின்பரோ நகரங்களை விட வெப்ப நிலை அதிகமாக இருக்குமென்றால் அது அதிசயமில்லையா? அதேமாதிரி கோடையிலும் இங்கு அதிக வெப்பமாக இருக்காது.''

''இந்த விநோத, மாறுபட்ட நிலைகளுக்கான காரணம் என்ன?'' என்று கேட்டான் கிட்டு.

''அட்லாண்டிக் கடலின் கதகதப்பான அலைகள் ஐஸ்லாந்தின் தென் கரைகளில் வந்து மோதுவதுதான் இதற்குக் காரணம். வடக்குக் கடற்கரைகளை ஆர்க்டிக்கடலின் குளிர் நீர் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறது. அட்லாண்டிக் கடலின் தொடர்பில்லாவிடில் எங்கள் நாடு முழுவதும் நிரந்தரமாக ஐஸினால் மூடிக் கிடக்கும். கடலின் இந்தக் கதகதப்பு சூரிய ஒளியில் எவ்வித மாறுதலையும் உண்டாக்கி விடவில்லை. மாரிக் காலத்தில் ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் எங்களுக்குச் சூரியன் காட்சி தந்தால் அது அதிர்ஷ்டம்தான். ஐந்து மணி நேரம்தான் வெளிச்சமே இருக்கும். கோடையிலோ இதற்கு நேர் மாறு. நள்ளிரவில்கூடச் சூரியனைக் காணமுடியும். இருட்டவே இருட்டாது. நாளெல்லாம் பகல்தான்!''

'' அதிசயத்திலும் அதிசயம்தான் இது'' என்றான் பட்டு. ''இரவே இல்லாத பகலா?''

''ஐஸ்லாந்தில் முக்கால் பகுதி பனி மலைகள்தான் என்றாலும் இங்கு எரிமலைகளும் ஏராளம். பட்டுப்போன எரிமலைகள் இல்லை. உயிரோடிருக்கும் எரிமலைகள். அடிக்கடி பயங்கரமாக வெடித்துக் குமுறி அக்கினிக் குழம்பை உமிழும் பயங்கரத்தையும் காணலாம். சில சமயங்களில் பனிமலை முடிகளுக்குள்ளே இந்த எரிமலைகள் குமுறும்போது பனிக்கட்டிகள் உருகி வெள்ளப் பெருக்கு ஏற்படும். இப்படி இந்த நாட்டின் பூமிக்கு அடியிலே எபபோதும் எரிமலைகள் கனன்று கொண்டிருப்பதினால் வெந்நீர் ஊற்றுக்களும் ஏரிகளும் இங்கு ஏராளம். மற்ற தேசங்களில் குளிர் சாதனம் செய்வது போல் எங்கள் நாட்டில் இந்த

வெந்நீர் ஊற்றுக்களின் உதவியால் வீடுகள், காரியாலயங்கள் ஆகிய எல்லா இடங்களையும் கதகதப்பாக்கிக் கொள்ளுகிறோம். உஷ்ணப் பிரதேசத்தில் விளையும் பயிர்களைக் கூட 'பசுமை வீடுகளில்' (Green Houses) இந்த வெந்நீரின் கதகதப்பைக் கொண்டு இங்குள்ள சீதோஷ்ண நிலையை மாற்றிப் பயிர் செய்கிறோம்.

''ஐஸ''ம் அக்கினியும் உள்ள எங்கள் நாட்டைக் காண ஏராளமான உல்லாசப் பயணிகள் இங்கு வருகின்றனர். வெந்நீர் ஊற்றுக்கள்தான் அவர்களுடைய வேடிக்கைக்கான இடம். இவைகளுக்குக் கீஸர்ஸ் (Geysers) என்று பெயர் கஷர்ஸ் (Gushers) என்றும் கூறுவோம். இருநூறு அடிகள் உயரம் வரைகூட இந்த ஊற்றுக்களிலிருந்து வெந்நீர் பீச்சியடிக்கும். இந்த ஊற்றுக்களைக் கொண்டு நாங்கள் இயந்திரங்களை ஓட்டுகிறோம், மின்சார உற்பத்தி செய்கிறோம். சில ஏரிகளின் நீர்மட்டம் ஒரு நாள் திடீரென்று உயருவதையும் மறு நாள் குறைவதையும் காண உங்களுக்கு வியப்பாக இருக்கும்'' என்றான் ஹெல்கா.

''இத்தனை அதிசயங்களும் உங்கள் நாட்டின் அடியில் கனன்று கொண்டிருக்கும் எரிமலைகளினால்தான் இல்லையா?'' என்று கேட்டாள் பட்டு.

'' ஆமாம். கடற்கரை ஓரங்களில் உள்ள சிறுசிறு ஊர்களில்தான் நாங்கள் வாழ்கிறோம். பதினைந்தில் ஒரு பாகம் தான் வாழ்வதற்கு ஏற்ற இடங்கள். 40,000 சதுர மைலில் 400 சதுர மைல்களில்தான் நாங்கள் பயிர் செய்கிறோம். மற்ற இடங்களிலெல்லாம் எரிமலையும் பனி மூடிய மலைகளும் நீர்வீழ்ச்சிகளும் தான். வருஷத்தில் ஒரு மாதம்தான் உறை பனி இல்லாமல் இருக்கும். அந்த மாதமும் கூடக் குளிர் காற்றும் ஈர நச நசப்பும்தான். குடியானவர்களின் நிலமெல்லாம் அநேகமாகப் புல்வெளிகள் தான். கோடையில் இங்கிருந்து புல்லைச் சேமித்து வைப்பார்கள், மாரியில் ஆடு மாடு, குதிரைகளுக்கு உணவாக. உருளைக் கிழங்கும், நீங்கள் நூல்கோல் என்று சொல்லும் டர்னிப்பும் கொஞ்சம் கொஞ்சம் பயிர் செய்வார்கள். வெந்நீர் ஊற்றுக்களின் வெது வெதுப்பைப் பயன்படுத்தித் தக்காளி, பழ வகைகள், திராட்சை, ஏன், வாழை கூடப் பயிர் செய்கிறார்கள் - அதற்கென அமைக்கப்பட்ட வீடுகளில்.

''எங்கள் முக்கியத் தொழில் மீன் பிடித்தல்தான். கதகதப்பான அட்லாண்டிக்கும், குளுகுளு ஆர்க்டிக்கும் - கலக்கும் இடத்தில் எங்கள் நாடு இருப்பதால் ஏராளமான, வகை வகையான மீன்கள் உண்டு. திமிங்கிலம், சுறா, ஸீல் ஆகியவைகளையும் வேட்டையாடிப் பிடிப்பதில் வல்லவர்கள் நாங்கள். எங்கள் பொருளாதாரத்தை உயர்த்துவது இந்த மீன்கள்தான். மீன்களைப் பக்குவப்படுத்தி அனுப்பக் கடற்கரை யோரங்களில் ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன. உலகின் மிகச் சிறந்த மீன் பிடிப்பாளர்கள் நாங்கள்தான். மீன்களைப் பிடித்த சில மணி நேரங்களில் அதைப் பக்குவப் படுத்திப் பதனம் செய்து ஏற்றுமதிக்குத் தயாராக்கிவிடுவோம். ஐஸ்லாந்தின் ஏற்றுமதியில் 95 சதவீதம் மீன்கள்தான். என் அண்ணா மீன் பக்குவம் செய்யும் தொழிற்சாலையில்தான் வேலை செய்கிறான், என் தம்பி எரிக் ஆடு மேய்ப்பதில் ஆர்வம் உடையவன். வருஷத்தில் நான்கு மாதக் கோடை விடுமுறையையும் மாமாவின் ஆட்டுப் பண்ணையில் கழிப்பான். எங்கள் நாட்டு ஆடுகளுக்கு இரு வகையான ரோமம். மேலே முரட்டுத்தனமான நீண்ட ரோமம். இது குளிர்காற்று, மழை, பனியிலிருந்து இதைக் காப்பாற்றும். இதற்கு அடியிலே மிருதுவான, நேர்த்தியான ரோமம் இருக்கும். இதுவே கம்பளி நெய்யப் பயன்படும்.

''எங்கள் நாட்டில் நீங்கள் காண முடியாதவை இரண்டு. ஒன்று நாய்கள், இரண்டாவது ரயில்வேக்கள். இங்கு ரயில்களே கிடையாது. எங்கள் போக்குவரத்தெல்லாம் மோட்டார் அல்லது குதிரை வண்டிகளில்தான். சுத்தத்தை விரும்பும் நாங்கள் இங்கு நாய்களை அனுமதிப்பதே இல்லை'' என்ற ஹெல்கா தன் குதிரை மீது கிட்டுவையும் பட்டுவையும் ஏற்றிக் கொண்டு அருகிலிருந்த தன் வீட்டுக்கு போனான். ஆகாரத்தை முடித்துக் கொண்டு அவர்களை ஒரு வெந்நீர் ஊற்றைக் காட்ட அழைத்துப் போனான். ஊற்றின் அருகேயுள்ள பூமியில் ரொட்டி மாவைப் பிசைந்து ஒரு பெட்டியில் வைத்துப் புதைத்துச் சிறிது நேரம் கழித்து - எடுத்தபோது அதில் ரொட்டி பக்குவமாகச் சுடப்பட்டு இருப்பதைக் கண்ட கிட்டுவும் பட்டுவும் திகைத்தே போனார்கள்.

'' இது இயற்கை அன்னையின் 'ஆவன்'' என்றான் ஹெல்கா. ரொட்டி ரொம்பச் சுவையாக இருந்தது. பரமேசுவரன் தாத்தாவும் குழந்தைகளும் வெந்நீர் ஏரியில் குளித்து வெளியேறியதும் ''அப்பப்பா என்ன சூடு! இப்படிக் கொதிக்கிறதே!'' என்று வியந்தார்கள்





புத்திசாலிக் கழுதை!

வழக்கம் போல் அன்றும் நாயும், பூனையும், கழுதையும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தன. நாய் தன் பேச்சின் நடுவே 'நான் திருடர்களைக் குரைத்து விரட்டுகிறேன். மேலும் என் மோப்ப சக்தியின் மூலம் எந்தத் திருடனையும் பிடித்து விடுவேன்' என்று தன் பெருமைகளை எடுத்துக் கூறியது. பூனை சொன்னது. ''நான் கூடத்தான் ஒரே நாளில் பல எலிகளைக் கொன்று தின்கிறேன். என்னைப் பார்த்தால் எலிகள் நடுங்கும்'' என்று. ''என்னைத் திருடர்கள் கண்டால் அஞ்சுவர்'' என்றது நாய். கழுதையோ பேசாமல் வெறுமென உட்கார்ந்து இருந்தது. பிறகு பூனையும், நாயும் ''இந்தக் கழுதை எனத்துக்குத்தான் ஆகும்? சுமை சுமப்பதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது'' என்று கூறிக் கேலி செய்தன. கழுதையின் வெள்ளி மூக்கில் வேர்த்துக் கொட்டியது. அளவிலாக் கோபம் வந்தது. பின்பு. ''உங்களால்திருடனையும்,எலியையும்தான்விரட்ட முடியும். என்னால் சிங்கத்தைக்கூட விரட்டியடிக்க முடியும்'' என்று கழுதை கூறியது. நாயும், பூனையும், ''அது உன்னால் முடியாத காரியம்'' என்றன. உடனே கழுதை, ''வேண்டுமானால் என்னுடன் காட்டுக்கு வாருங்கள். நான் சிங்கத்தை விரட்டி அடிக்கிறேனா இல்லையா பாருங்கள்'' என்று கூறி அருகில் இருந்த காட்டுக்கு அவைகளை அழைத்துச் சென்றது. அப்பொழுது அந்தப் பக்கமாகச் சிங்கம் ஒன்று வருவதைக் கண்ட கழுதை, நாயையும், பூனைவையும் அருகில் இருந்த ஒரு புதரில் மறைந்து கொண்டு, தான் சிங்கத்தை விரட்டும் விதத்தைப் பார்க்கச் சொல்லி விட்டு, தனியே சிங்கத்தின் கண்ணில் படும்படி சென்றது. கழுதையைக் கண்ட சிங்கத்தின். வாயில் நீர் சுரந்தது. அது கழுதையின் மீது பாய்ந்தது. அப்பொழுது கழுதை சட்டென ஒதுங்கி ''விலங்கரசே! நான் கூறுவதைச் சற்று கேளுங்கள்'' என்றது. 'என்ன?' என்று கேட்டது சிங்கம். ''என்னுடைய பின்னங்காலில் பெரிய முள் ஒன்று தைத்துள்ளது. நீர் என்னைத் தின்னும் பொழுது அந்த முள் உம்முடைய தொண்டையில் அகப்படுமானால் நீர் இறந்து விடக்கூடும். ஆகையால் என் பின் காலில் உள்ள அந்த முள்ளை எடுத்து விட்டுப் பிறகு உம் விருப்பம்போல் என்னைத் தின்னலாம்'' என்றது கழுதை. சிங்கமும் அதை உண்மை என்று நினைத்து, அதன் பின்னங் காலிடம் சென்று காலைத் தூக்கச் சொல்லி உற்றுப் பார்த்தது. அதுதான் சமயம் என்று எண்ணிய கழுதை தன் உடல் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி விட்டது ஓர் உதை! அவ்வளவுதான்; சிங்கம் ஏழு கரணங்கள் அடித்து விழுந்தது. மூக்கு பிய்த்துக் கொண்டு இரத்தம் ஒழுகியது. சிங்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல் கர்ஜித்துக் கொண்டு ஓடியது. கழுதை, பூனை, நாய் இருந்த பக்கம் வீறுநடை போட்டுக் கொண்டுவந்தது. பூனையும், நாயும் வியப்பில் ஆழ்ந்தன. ''எங்களைவிட நீயே பலசாலி. நீயே பெருமைக்கு உரியவன்'' என்று பாராட்டின.

—ஆ. தேவராஜ்



சோப்பின் கதை

கிருஷ்ணவேணி



கி. மு. 600லேயே போனீஷியர்கள் சோப்புத் தயாரிக்கும் முறையை அறிந்திருந்தார்கள்.

'சுத்தம் சோறு போடும்' 'கூழானாலும் குளித்துக் குடி' போன்ற பழமொழிகள் உங்களுக்குத் தெரியும். சுத்தமாக இருக்க அன்றாடம் குளிக்க வேண்டும். குளிக்கும்போது பயன்படுவது சோப்பு. நம் நாட்டில் உடலின் வெளிப்புறத்தைக் சுத்தப்படுத்த வேறு பல பொருள்கள் இருந்தாலும்கூட நவீன யுகத்தில் சோப்பு முக்கிய பொருளாகக் கருதப்படுகிறது. மேலை நாடுகளிலோ சோப்பின் அவசியம் அதிகம்.

சோப்பு ஏதோ நவீன கால கண்டுபிடிப்பு என்று நீங்கள் நினைக்க வேண்டாம். கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, ஐரோப்பியர்களுக்குச் சோப்பின் உபயோகம் பற்றித் தெரிந்திருந்தது. கிரேக்கர்களும் ரோமானியர்களும் உடல் சுத்தத்தில் கருத்துடையவர்கள். ஆகவே, சோப்பின் அருமை தெரிந்தவர்கள். கிரேக்க வீரர்கள் போர்க்களத்துக்குப் போகுமுன்பும் கடவுளர்களுக்குப் பலி கொடுக்கும் சமயங்களிலும் உடலில் ஒருவிதத் தைலங்களைப் பூசிக் கொண்டுதான் போவார்களாம். இந்த மருந்து எண்ணெய், (திரவம்) சில வகை மரங்களின் பிசினை மணம் தரும் எண்ணெய்களோடு கலந்து தயாரிக்கப்படுவதாகும். இதற்குச் சோப்பின் குணங்கள் இருந்தன. ரோமானியர்களின் காலத்தில் குளிக்கும் இடங்கள் மிகப் பிரபலமாக இருந்தன. பொதுமக்களுக்காகவும் உயர் குடிப் பிறந்தவர்களுக்காகவும் தனித் தனியான குளிக்கும் இடங்கள் நாடெங்கும் கட்டப்பட்டிருந்தன. மத்தியதரைக் கடல் பிரதேச நாடுகளில் இக்காலத்தில் சோப்புப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். சோப்புத் தயாரிப்பை முதன் முதலில் கண்டறிந்தவர்கள் போனீஷியர்கள்தான் என்று தெரிகிறது. ஆட்டின் கொழுப்பையும், மரச் சாம்பலையும் கலந்து உப்பைக் கொண்டு அதைக் கெட்டிப்படுத்தித் தயாரிக்கப்பட்ட சோடா சோப்பு முதல் நூற்றாண்டில் புழக்கத்திலிருந்ததாக பிளினி (Pliny) என்பவரின் எழுத்துக்களிலிருந்து அறிய முடிகிறது: இது மிக எளிய முறை, இன்றைய சோப்புத் தயாரிக்கும் முறையின் அடிப்படையும் இதுவேதான். முதன் முதலில் சோப்பு என்ற பொருளை அவரவர் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொண்டார்கள். பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் சோப்புத் தயாரித்தல் ஒரு தொழிலாக மாறியது. முதலில் இத்தாலியிலும் பிறகு பிரான்சிலும் இங்கிலாந்திலும் இத்தொழில் பிரபலமாகியது. வெனிஸ் நகர வர்த்தகர்கள் தயாரிக்கும் சோப்புக்குத் தனி மவுசும் மதிப்பும் இருந்தது. தரமான சோப்புக்களைத் தயாரிப்பதில் புகழ் பெற்று விளங்கினர் வெனிஸ்நகரத்தார்.

சோப்பு எப்படித் தயாரிக்கப்படுகிறதென்று உங்களுக்குத் தெரியும். கொழுப்பு அல்லது எண்ணெய் இவற்றோடு காரத்தைக் கலந்து சோப்புத் தயாரிக்கப் படுகிறது. கொழுப்புப் பொருள் காரத்தின் சேர்க்கையால் சோப்பாகவும் கிளிஸரினாகவும் பிரிக்கப் படுகிறது. காஸ்டிக் சோடாதான் காரமாகப் பயன்படுத்தப்படும். நம் கிராமங்களில் 'சவுக்காரம்' என்று இன்றைக்கும் சொல்லுவார்கள். சலவைக்குப் பயன்படும் (சவுக்காரம்) சோப்பை வெகு காலம் வரை மிருகக் கொழுப்பிலிருந்துதான் தயாரித்தார்கள். டாய்லட் சோப்பான உடலுக்குத் தேய்த்துக் குளிக்கும் சோப்புக்களை ஆலிவ், தேங்காய், பருத்தி, மீன் ஆகியவற்றின் எண்ணெயிலிருந்து தயாரிக்கலானார்கள். மணத்துக்கு வாசனைப் பொருள்கள் சேர்ப்பார்கள்.

சோப்புத் தயாரிப்பதற்கு இரண்டு முறைகள் உண்டு. ஒன்று கொதிக்க வைக்கும் முறை, மற்றது ஹைட்ராலிடிக் முறை. கொதிக்க வைத்துத் தயாரிப்பதுதான் பழமையான முறை. காஸ்டிக் சோடாவையும் கொழுப்பு அல்லது எண்ணெயையும் கலந்து


பெரிய கலங்களிலிட்டுக் காய்ச்சுவார்கள். ஒரு நிலையில் இத்துடன் சாப்பாட்டு உப்பைக் கலந்து பக்குவப்படுத்துவார்கள். கலத்தின் மேல் பகுதியில் சோப்பு கெட்டியாக உருவாகி இருக்கும். இந்தச் சுத்தமான சோப்பு எழுபது சத விகிதம் சோப்பும் முப்பது சத விகிதம் நீரும் கொண்டதாக இருக்கும். அடியில் தங்கியுள்ள திரவத்தில் அழுக்குகள் கலந்து கரைந்திருக்கும். இம்முறையில் சோப்புத் தயாரிக்க ஐந்திலிருந்து பத்து தினங்கள் வரை ஆகும். தவிர சோப்புத் தயாரிப்பதில் திறமை பெற்றவர் அடிக்கடி சுத்தமான சோப்பு உருவாகிவிட்டதா என்று சோதிக்க இக்கலவையை ருசி பார்த்து அறிவார்களாம்.

கொழுப்பைச் சோப்பாகவும் கிளிஸரினாகவும் காஸ்டிக் சோடா பிரிக்கும் இந்தக் கிரியைக்கு ஸாபோனிபிகேஷன் என்று பெயர். ஹைட்ராலிடிக் முறையில் சோப்புத் தயாரிப்பில் ஸாபோனிபிகேஷன் ஏற்படக் கொழுப்பினுள் மிக மிக உயர் கொதி நிலையில் (சூபர் ஹீட்டட்) தண்ணீரைப் பாய்ச்சுகிறார்கள். இந்த முறையினால் சுத்தமான சோப்பு தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்கும். தவிர, கொழுப்பு சோப்பாக மாறப் பல நாட்கள் ஆவதற்குப் பதில் சில மணி நேரங்களிலேயே இம்மாற்றம் நிகழ்கிறது. இன்றைய நவீன குளியல் சோப்பில் 85 சத விகிதம் சோப்பும் 15 சத விகிதம் தண்ணீரும் உள்ளன. வர்ணங்களும் வாசனையும் மிகக் குறைந்த அளவில் சேர்க்கப் படுகின்றன.

1930ல் சலவை யந்திரங்கள் தோன்றியபோது கட்டிச் சோப்புக்குப் பதில் வேறு வகையான சோப்புத் தேவைப்பட்டது. அப்போது தோன்றியது சோப்புத் தூள். சோப்பை மிக மெல்லிய பாளங்களாகப் பரத்தி அதை அப்படியே காய விட்டார்கள். காய்ந்ததும் அதை நொறுக்கித் தூளாக்கி வாஷிங் மெஷிக்குப் பயன்படத் தக்க வகையில் தயாரித்தார்கள். யந்திரம் இல்லாதவர்களும் கூடக் கட்டிச் சோப்பைக் கொண்டு ஆடைகளின் மீது கஷ்டப்பட்டுத் தேய்ப்பதின் சிரமத்திலிருந்து விடுபட சோப்புத் தூளையே பயன்படுத்தலானார்கள். இன்றைக்கும் இது பயன்பட்டு வருகிறது.

சமீப காலத்தில் சோப்புக்குப் பதில் சோப்புப் போன்ற ஒரு பொருள் (தூள்களாக) கண்டுபிடிக்கப்பட்டுப் பிரபலமாகி விட்டது. இதற்கு டிடர்ஜண்ட் (அழுக்குப்போக்கி) என்று பெயர். கார்பன், ஹைட்ரஜன், கந்தகம், பிராணவாயு, சோடியம், நைட்ரஜன் இவைகளின் உதவியுடன் ரசாயனப் பொருள்களைச் செயற்கை முறையில் கலந்து டிடர்ஜண்ட்களைத் தயாரிக்கிறார்கள். இப்படி ஒரு புதிய செயற்கைப்பொருள் கண்டு பிடிக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? சோப்புக்குச் சில குறைகள் இருந்தன. சில நீர்களில் சோப்புச் செயல்படுவதில்லை. உப்பு நீரில் நுரை உண்டாவதில்லை. அமிலம் அதிகமான நீரில் சலவைக் குணம் போய் ஒருவகையான கெட்டியான கொழுப்புப் பொருளாக மாறிவிடும். சோப்பில் உள்ள சோடாவும் பொட்டாஷும் கம்பளி, பட்டு ஆகியவற்றைச் சலவை செய்யும்பொழுது ஒரு நிலையில் வீணாக்கின. நல்ல நீரில்கூட அதிலுள்ள கால்ஷியமும் மக்னீஷியமும் சோப்பை நீரில் கரையாத ஒரு மஞ்சள் தூளாக மாற்றுகின்றன. இது நுரை ஏற்படுவதையும், சுத்தப் படுத்துவதையும் குறைப்பதோடு பொருள்களை கடினமாக்கவும் செய்கின்றன. இத்தகைய குறைகளிலிருந்து விடுபடப் புதியதோர் அழுக்குப் போக்கியைக் கண்டுபிடிக்கும் அவசியம் ஏற்பட்டது. அதன் விளைவே இன்று ஏராளமான பெயர்களில் சோப்புத் தூள்கள் உருவாகி விட்டன. அட்டைப் பெட்டிகளிலும், பிளாஸ்டிக் ஜாடிகளிலும், பைகளிலும் வெள்ளையும் நீலமுமாக விற்கப்படும் சோப்புத் தூள்களெல்லாம் செயற்கை முறையில் தயாராகும் அழுக்குப் போக்கிகளே !

எகிப்தியர்கள் சோப்புத் தைலமிட்டுக் கொள்ளுதல்.



ரோமானியர்களின் குளிக்கும் இடங்கள்.





தெரியுமா?

1055. மிக அபூர்வமான ரத்தினக்கல் எது? அந்த வகையில் எத்தனை கற்கள் உள்ளன?

1056. காகிதக் கரன்ஸி நோட்டுக்களை முதன் முதலில் உபயோகித்தவர்கள் யார் தெரியுமா?

1057. உலகின் மிகப் பெரிய அரண்மனை எங்குள்ளது?

1058. முதல் டெலிவிஷன் நிகழ்ச்சி 1936ல் ஒளிபரப்பப்பட்டது. அது எங்கே என்று சொல்ல முடியுமா?

1059. உலகின் மிக மிகக் குளிர்ந்த இடம் எது?

1060. நம்மிடையே ராமன், கிருஷ்ணன் என்ற பெயர்கள் அதிகமாக இருப்பது போல் ஆங்கிலேயரிடையே அதிகமாக உள்ள பெயர் ஸ்மித்தா, பிரவுனா?

1061. உலகின் மிகப் பெரிய பிராணிகளின் சரணாலயம் (Reserve) எங்கு உள்ளது, என்ன பெயர்?

1062. இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்ற ஒரே நபர் யார்?

1063. துண்டிப்பு இல்லாத உலகின் மிக நீளமான பாதாள வழிப் பாதை எங்குள்ளது?

1064. பக்கிங்ஹாம் அரண்மனையில் மொத்தம் எத்தனை அறைகள் இருக்கின்றன என்று தெரியுமா?

1065. உலகில் மிக மிகச் சாமானியமான உலோகம், அதாவது மிக அதிகமாகக் கிடைக்கும் உலோகம் எது?

1066. சூரியனின் வயது உத்தேசமாக எவ்வளவு என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்?

1067. உலகின் நிலப்பரப்பு எவ்வளவு என்று கணக்கிட்டிருக்கிறார்கள்?

1068. குறுக்கெழுத்துப் போட்டி என்றால் தெரியுமல்லவா உங்களுக்கு? அது முதன் முதலில் வெளியிடப்பட்டது எப்போது? எங்கே?

1069. 1930ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் எது?

1070. கிறிஸ்துமஸ் தீவு எங்குள்ளது?

1071. நீலகிரி மலை-புளூ மவுண்டன்-கோவை ஜில்லாவில் உள்ளதென்று தெரியும். நீல மலைகள் வேறு எங்குள்ளன தெரியுமா?

1072. அமெரிக்காவின் இரண்டாவது மிகப் பெரிய மாகாணம் எது?

1073. நில நடுக்கங்களைப் (பூகம்பம்) பதிவு செய்யும் யந்திரத்துக்கு என்ன பெயர்?


1074. ஐரோப்பாவின் மிக உயரமான தலைநகரம் எது?

1075. உலகில் இன்று மிகப் பழைமையான அச்சிட்ட புத்தகம் எது, எங்குள்ளது?




தெரியுமே!

1055. டாஃபைட் (Taaffeite) என்ற ரத்தினக்கல், வெளிர் மாவ் (Mauve) வண்ணம் கொண்டது. உலகில் இக்கற்கள் இரண்டே இரண்டு தான் உள்ளன. 1056. சீனர்கள், ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த டாங் வமிசத்தினரின் ஆட்சிக் காலத்தில். 1057. பாரிஸில் - லூவ்ரா (Louvre) என்பது அதன் பெயர். ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இது 1546க்கும் 1857க்குமிடையே கட்டப்பட்டது. 1058. லண்டனில் உள்ள அலெக்ஸாண்ட்ரா அரண்மனையில். 1059. அண்டார்டிகாவிலுள்ள வோஸ்டாக் (Vostok) 1958 ஆகஸ்ட் 28ந் தேதி பதிவான மிகக் குறைவான வெப்பம் (மைனஸ்) -125.3°F 1060. ஸ்மித் - பிரிட்டனில் மட்டும் ஸ்மித் என்று பெயர் கொண்ட 5,50,000 பேர் இன்ஷியூரன்ஸ் செய்திருக்கிறார்கள். 1061. தென் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள எடோஷா (Etosha) ரிசர்வ். உலகிலேயே மிகப் பெரிய பிராணிகளின் சரணாலயம் இது. 38,427 சதுர மைல் பரப்புள்ளது. 1062. மேரி க்யூரி அம்மையார். 1063. லண்டனில் உள்ள பாதாள இரும்புப் பாதை. நீளம் 17 மைல்களும் 528 கெஜங்களும். 1064. அறுநூறு அறைகள். 1065. அலுமினியம். 1066. ஆறு மில்லியன் வருஷங்கள் 1067. விஞ்ஞானிகளின் கணக்குப்படி 5,81,60,000 சதுர மைல்கள். 1068. நியூயார்க் வேர்ல்ட் (New York World) என்ற பத்திரிகையில் 1913ம் ஆண்டில். 1069. புளூட்டோ. 1070. இந்தப் பெயரில் இரண்டு தீவுகள் உள்ளன. ஒன்று ஜாவாவின் தென் மேற்குப் பகுதியிலும் மற்றது பசிபிக் கடலில் உள்ள ஒரு பவழத் தீவுக்கும் இப்பெயர். 1071. ஆஸ்திரேலியாவிலுள்ள நியூ ஸவுத் வேல்ஸில் புளூ மவுண்டன்கள் (நீல மலைகள்) உள்ளன. 1072. கலிபோர்னியா. 1073. ஸீஸ்மோகிராப் (Seismograph) 1074. மாட்ரிட். கடல் மட்டத்திலிருந்து 2180 அடிகள் உயரத்திலுள்ளது. 1075. கி. பி. 868ல் சீனாவில் பதிப்பிக்கப்பட்டது. (சீனமொழியில்) புத்தர்களின் வேத புத்தகமான வைர சூத்திரம் (Diamond Sutra) என்ற நூல்.





'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்



இன்பமயமான கனவுக் காட்சி...
மபத்லால் துணிமணிகளின் ஆட்சி!

இன்பமயமான ஒரு கனவு...
அழகு ஆட்சி நடத்தும் உங்கள்
துணிமணிகளைப் பார்க்கும்
விழிகளெல்லாம் உங்களை விட்டு
அகல மறுக்கின்றன. திடுமென
விழிப்பு...கனவல்ல நனவே என்பதை
உணர்கிறீர்கள். பாலியெஸ்டர்
இழைகலந்த கவின்மிகு ஷர்ட்டிங்,
ஸுட்டிங் அல்லது ரெடிமேட்
ஆடைகள் அணிந்த நீங்கள்
உண்மையிலேயே கவர்ச்சியின்
கடுநாயகமாக விளங்குகிறீர்கள்!

மபத்லால் க்ரூப்
அளிக்கும்
கீர்த்தியான துணிமணிகள்

டெரோஸெல்
பாலியெஸ்டர் இழைகலந்த
ஷர்ட்டிங்குகள்

டெரோ:ஃபில்
பாலியெஸ்டர் ஃபிலமெண்ட்
யார்ன் துணிகள்

எஸ்டர்காட்
பாலியெஸ்டர்
இழைகலந்த
ஸுட்டிங்குகள்

மபத்லால் அப்பேரல்
அளிக்கும்
கவர்ச்சிமிக்க
ரெடிமேட்
ஆடைகள்

AIYARS-M. 339 TM

மக்கள் நம்பிக்கை என்னும் இனிதான சுமையை மகிழ்வுடன் ஏற்று செயல்படுவதே எங்கள் குறிக்கோள்.



60 ஆண்டு காலமாக உழைத்து உழைத்து நாங்கள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகியிருக்கிறோம். என்வேதான் சிறிய பார்சல்கள் முதல் பெரிய பார்சல்கள் வரை நாங்கள் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்போம் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது.


இந்த நம்பிக்கைக்கு அடிப்படை இவைதான்:

- எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்த மானவையே. எனவே காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.
- அதிக அளவில் பார்சல்களை ஏற்றிச் செல்ல நிறைய டிரெய்லர்களும் எங்களிடம் உண்டு. எனவே காத்திருக்கத் தேவையில்லை.
- லாரிகளில் பழுதேற்பட்டால் வழித் தடங்களில் அமைந்துள்ள எங்கள் பட்டறைகள் உடனடியாகச் சீர் செய்கின்றன. எனவே தாமதம் தவிர்க்கப்படுகிறது.
- ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நேரிடையான பார்சல் சர்வீஸ் இருப்பதனால் நேரம் மிச்சப்படுகிறது. பார்சல்கள் இறக்கி ஏற்றப்படுவது தவிர்க்கப்படுவதால் சேதமும் விளைவதில்லை.
- தென்னகத்தின் பெரு நகரங்களுக்கிடையே மின்னல்வேக சர்வீஸ்களும் நடத்துகிறோம். எனவே உங்கள் பொன்னான நேரம் மிச்சப்படுகிறது.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

TVS உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்



FDS SR 1954 TMB